www.tamilarangam.net

# சர்வதேசதமிழர்

தமிழர்களை முன்னேற்றம், ஐக்கியம் கருதி ஒன்றிணைக்கும் நோர்வே தமிழ்ச்சஞ்சிகை


காந்தன்


ராதிகா பாலா


மகள்: உஷா  இரா.கனகரத்தினம்





பா.யோகராஜா  சு.கருணானந்தன்


பரிசுபெற்றோர் :அதிமேல்பிரிவு


ந.திருச் செல்வி


பார்வையாளர்

அன்னைபூபதி தமிழ்க்கலைக்கூடம்
ஐந்தாவது ஆண்டுவிழா
:பேச்சுப்போட்டி:


அகிலன்


ஜெயசந்திரன்


பாலர்பிரிவு


கீழ்ப்பிரிவு  மத்தியபிரிவு


மேல்பிரிவு  அதிபர்.சிவதாஸ்

Vol.4;Nr.2 1997  Sarvadesa Tamiler: Estd.1994  ISSN.0805-7443

**Norway Tamil magazine to co-ordinate the Tamils for advancement & solidarity**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கௌரவ சர்வதேச இணைப்பாளர்கள் / நல்லெண்ணத்தூதுவர்கள்:
நோர்வே:ஒஸ்லோ:தி.திலீபன்.22.166733:கு.பாலதாஸ் 22.206327பேர்கன்:என்.ஜெயதரன்,ஜ.றோயலா துரொண்கைம்:த.தியாகலிங்கம்
ஸ்ரவங்கர்:அ.பாஸ்கான்:முபாரக் அலி கிறிஸ்ரியன்சாண்ட்:ம.பஸ்ரியன்ஏககண்ட்:பொன்.சிவா:துறம்சோ:கே.சிவராஜா: வார்டோ:

## வாசகர் களம்!

**அன்பின் ஆசிரியருக்கு,**
சர்வதேசதமிழர் இதழ் கிடைத்தது.
நன்றியும்மகிழ்ச்சியும்! எம் மழலை
களின் புத்தாண்டுவாழ்த்து மடல்.
முதல்பக்கத்தில்.கண்டு மகிழ்ந்தோம்.
நன்றி!மேலும் எனது-எம்.ஜி.ஆர்.
படங்கள்-ஆங்கிலநூலின் விமர்சன
மும் வாசித்து மகிழ்ந்தேன்.Humour
எனும் ஆங்கிலசொல்லுக்குரிய தமிழ்
சொல்லை தேடிக்கொண்டிருந்தேன்.
அதற்கு குதூகலம் என மொழிபெ
யர்த்தமை மிக்கநன்றாக இருந்தது.
இதைப்போல sex எனும் சொல்லின்
பல அர்த்தங்கள் அடங்கிய தமிழ்ச்
சொல்லை நாம் புதிதாக கண்டுபிடி
க்கவேண்டும். sexual harassment
எனும் சொல்லுக்கு பால்தொந்தரவு
எனும் சொல் அழகாகஇல்லை என
நம்புகிறேன்.இவற்றை,சற்று குறிப்பிட
காரணம்-கட்டாயம் ஒருஆங்கில-
தமிழ் அகராதி தொகுக்கவேண்டிய
நிர்ப்பந்தம் நமக்கு உள்ளது.
இருபது ஆண்டுகளின் பின் இவ்
வாண்டு தமிழில் நூல் ஒன்றுவெளி
யிட கட்டுரைகளை தயார் செய்துள்
ளேன்.இவ்வாண்டு எம்.ஜி.ஆரின் 80
வது பிறந்தஆண்டுநினைவும்,கவிய
ரசு கண்ணதாசனின் 70வது பிறந்த
ஆண்டுநினைவும் இடம்பெறுவதால்
இருவர் பங்களிப்பை பாராட்டுமுக
மாக-தமிழ்க்கவியரசு கண்ணதாசன்
எனும் நூல் விரைவில்வரவுள்ளது.
**சச்சி சிறிகாந்தா - யப்பான்**
(பன்மொழிகளை,தமிழில்,மொழிபெயர்க்கையி
லேற்படும் சிக்கல்கள்,தழுப்பங்கள்குறித்து,
வா.களத்தில்,மேலும்விவாதித்து,தெளிவுபெற
சந்தர்ப்பம் வழங்கப்படும்.2000ம் ஆண்டு
கணனி,விஞ்ஞானசவாலுக்கு நாம்தயாரா?-ஆர்

-----

**தமிழ்த்திரு ஆசிரியருக்கு,**
வணக்கம்!சர்வதேசதமிழரை ஒன்றி
ணைக்கும் நட்புப்பாலமாய்-உறவுப்
பாலமாய் திகழும் சர்வதேசதமிழர்
இதழை,கவிஞர் சின்னத்திருப்பதி
(சேலம்) கவிஞர் கே.எம்.இராசமா
ணிக்கம் மூலம் படித்தறிந்தேன்-
மகிழ்ந்தேன்-புளகாங்கிதமடைந்தேன்.
அவ்வப்போது கவிதைகள் அனுப்பி
உற்சாகம் ஊட்ட விரும்புகிறேன்.
**கவிஞர் சொல்லரசு-சேலம்-1**

**அன்புள்ள ஆசிரியருக்கு,**
முதல்கண் விஷ்ணுஅவதாரங்களை
அம்பலப்படுத்திய உண்மைவிளம்பி
க்கு எனதுநன்றிகள் பல! நடுநிலை
யான மொழிபெயர்ப்பாளர்கட்கு என
து பாராட்டுகளும்,வாழ்த்துகளும்
உண்டு.அதேசமயம் தொழிலை தங்
கள்.சுயநலத்துக்காக.பாவித்து தமிழ்
இனத்தை காட்டிக்கொடுக்கும் எட்
டப்பர்களை,நாம் இனம்கண்டு,அவர்
கள் சுயஉருவங்களை அம்பலப்படு
த்தவேண்டும்.சிலமொழிபெயர்ப்பாளர்
களின் படம்,பொலிஸ்அலுவலகத்தில்
தொங்கும்அளவுக்கு அவர்கள்,பொலி
சார் மனதில்இடம்பிடித்துள்ளது,மிக
வும் ஆச்சரியப்படவைக்கிறது.
**ராஜா....................பேர்கன்**

-----

**அன்புள்ள ஆசிரியருக்கு,**
என் (விபீஷணனின்) கவிதைக்கு
இந்திரனின் காரமான விமர்சனம்
கண்டேன்!வெறும்இழப்புகளின்,மதிப்
பீட்டில்,வெற்றி-தோல்வி என்றும்
இருந்ததில்லை.அப்படியாயின் பேரிழ
ப்புகளைச்சந்தித்த எரித்திரியா,வியட்
நாம் போன்றநாடுகளும் தோல்விகண்
டநாடுகளாகிவிடும்.வெறுமனே ஆயு
தபோராட்டத்தால்மட்டும் வெற்றிவரா
து,(3ம்தரப்புமூலம்)சமாதான பேச்சு
போன்றவை தான் உதவவேண்டும்.
எமது இனத்தின் தலைவிதியை,
அரசியலை இன்று நிர்ணயிக்கும்
புலிகளின் தலைவன் பிரபாகரனின்,
பிறந்தநாள் புனிதமாகஇருக்கவேண்
டும்,என்பதே எம் ஆதங்கம்!
பிரபாகரனின் பிறந்தநாள்வருகிறது,
எங்கே அடிவிழுகிறதோ!அப்பாவிக
ளான எமக்கு எப்போ இராணுவம்
குண்டுவீசுமோ! என எந்த ஒரு
தமிழ் உயிரும் அந்நாளில் கவலை
ப்படக்கூடாது!பிரபாகரனின் பிறந்தநா
ளில் சற்று நிம்மதியாக தூங்கலாம்
என சிங்களஇராணுவன் சிந்திப்பது
கூட,அர்த்தமுள்ளது தான்!
சிங்களஆமி நம்மைவிட்டு போனா
லும்,நம்மிடையேயுள்ள பிரச்சனைகள்
தொடரத்தான் செய்யும்! தீராது!!
நவீனஉலகில்,வெற்றியும்,தோல்வியும்
ஆயுதங்களாலும்,இழப்புகளாலுமன்றி
அறிவு,சாணக்கியஅரசியலாலும் நிர்
ணயிக்கப்படும்.--**விபீஷணன்**

**சர்வதேசதமிழர்.1997 இல.2**
**ஆசிரியர் கருத்து:**

## தமிழரும் ஆயுதப்போராட்டமும்

தமிழர்வரலாற்றை எடுத்துக்கொண்
டால் சேர,சோழ,பாண்டியர் தொட்டு
வேலுப்பிள்ளை பிரபாகரன் வரையில்
அம்பு,வில் தொடக்கம் ஆட்லெறி
வரையும் என ஆயுதப்போராட்டம்
பல்வேறுகாரணங்களுக்காக வளர்ச்சி
பெற்றே வந்துள்ளது.முந்தையபோரா
ட்டம் அப்பாவிமக்கள்,பெண்கள்,சிறா
ர்கள்,முதியோரை பாதிக்காதபடி,போர்
க்களத்தில் படைகட்கு மத்தியில்
நடந்தது.இன்றைய போராட்டம்
நொண்டிகளையும்,குருடர்களையும்,
செவிடர்களையும்,அகதிகளையும்,வி
தவைகளையும்,அநாதைகளையும்,
நோயாளிகளையும்,போசாக்கிழந்தவர்
களையும்,மனமுடைந்தவர்களையும்
கல்வி,தொழில்,வீடு,உறவுஇழந்தவர்க
ளையும் உருவாக்கியுள்ளது.
யுத்தத்தின்,கொடூரம்,சகோதரப்பு மக்க
ளாலும்,ஆழமாகஉணரப்பட்டுள்ளது.
தமிழர்களின் இழப்பே ப மடங்கு
,என்பதை,கூறவும்வேண்டுமோ!
வெற்றி,தோல்வி,வெற்றி-தோல்வியின்
மை இம்மூன்றும் எந்தவொருபோட்
டியிலோ,போராட்டத்திலோ சாத்தியமா
னவையே.போட்டியில் பங்கேற்பதே
மகிழ்ச்சிக்குரியவிடயம்.வெல்வது
பழம்நழுவிப்பாலில் விழுவதுபோன்ற
து.போராட்டத்தில் பங்கேற்பது வீரத்
துக்குரியதெனினும்,அதன் முடிவு
சூதாட்ட முடிவுக்கு ஒப்பானது.வெற்
றி,தோல்வி,வெற்றி-தோல்வியின்மைக்
கு,சமஅளவானசந்தர்ப்பங்களே உள.
எவ்வளவு காலம் ஒருபோராட்டம்
தொடரலாம்?எவ்வளவுஇழப்புகளை
மக்கள் தாங்கலாம்?எதிரிக்குபிறநாடு
களின்ஆதரவென்ன?தேசிய,சர்வதேச
அரசியல்ஆதரவுகள் நமக்குஎப்படி?
நமது பிரச்சனையை எப்படி சர்வ
தேச மயப்படுத்தியுள்ளோம்?நமது
பிரச்சனையை,சர்வதேசதகவல்துறை
பிரபலப்படுத்த,நாம் செய்யும் பணி
என்ன?பிற இனமக்கள்,பிரபலங்கள்
எமதுபிரச்சனையை எடுத்துச்சொல்
லவும்,செல்லவும் நாம்செய்யும்பணி
என்ன?எனஆராய்தல்,விவாதித்தல்
,செயல்படல் என்பனவும் முக்கியம்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## உலகதமிழர்ஆவணகாப்பக கண்காட்சி- ஒஸ்லோ.1997

தமிழர்க்கு என ஒருநாடு இல்லாதபடியால்,தனிமனிதர்களே சிலசமயம் பொறுப்பானதுறைகளின் பணிகளை செய்யவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளனர்.ஆவணத்துறை செய்யவேண்டியபணியை தனியாக,தாமாக,உணர்ந்து பாரியார் பவளராணி துணையுடன் 1956இலிருந்து,செய்துவரும் ஈழத்து குரும்பசிட்டி கனகரட்ணம் சர்வதேசதமிழரின் இதயபூர்வமான பாராட்டுகட்கு உரியவர்!

கனடா,இலங்கையில் நடாத்தப்பட்ட இக்கண்காட்சி,நோர்வேயில் 01.03.97 ஒஸ்லோ–பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

சர்வதேசதமிழருக்காக இவரை ஆசிரியர் பிரபு பேட்டிகண்டார். 01.08.1934 ல் யாழ்ப்பாணம் குரும்பசிட்டியில் பிறந்து,வசாவிளான் மகாவித்தியாலயத்தில்,படித்த இவர்,1963ல் பவளராணியை மணந்து(தந்தை செல்வா தலைமையில் திருமணம் நடந்தது.)புஸ்பா, உஷா எனும் இருபெண்பிள்ளைகட்கு தந்தையானார்.இருவருமே,தற்போது,நோர்வே, பேர்கனில் வாழ்கிறார்கள்.

மூத்தபுதல்வி சாந்தகுமாரை மணந்து,1ஆண்,1பெண் என,பேரப்பிள்ளைகளை இவருக்கு அளித்துள்ளார். கண்டியில் மனைவியுடன் வாழும் கனகரத்தினம் நோர்வேயில் நிரந்தரமாக இந்த உலகதமிழர்ஆவணகாப்பகத்தை நிறுவ எண்ணியுள்ளார். இதற்கு கணனியாளர்.ஜெயசந்திரன், ஏனைய அமைப்புக்குழு உறுப்பினர்களான பா.யோகராஜா,சி.பிரேம்ராஜ், யோகேஸ்வரன்,அஞ்சலோ,சித்திவினாயகநாதன்ஆகியோர் உறுதுணையாக விளங்குவர்.

1956ல் தனிச்சிங்களசட்டம் வந்தபோதுதான் சத்தியாக்கிரகம்,தமிழருக்கெதிரான வன்முறைபற்றிய பத்திரிகை குறிப்புகளை இவர்சேகரிக்க ஆரம்பித்தார்.கண்டியில் தனியார்துறையில் பணிபுரிந்த,இவருக்கு பாரியார் ஆவணங்களை ஒழுங்குபடுத்துவதில் அல்லும்,பகலும் உதவினார்,என்பதை நாம் பாராட்டியேதீரவேண்டும்.


ஒவ்வொரு மனிதனின் வெற்றிக்கு பின்னாலும் ஒருபெண் இருப்பாள்! என்ற தத்துவத்தை இவர்மீளவும் நிரூபித்துவிட்டார்.தமிழ்பெண்களும் இவரது உதாரணத்தை பின்பற்றுவதுடன்,தாமும் சாதனை புரியவேண்டும்.தமிழரும் விஞ்ஞானமும்,தமிழரும் மருத்துவமும்.... என பற்பல கண்காட்சிக்கு,இப்போதே பலர் விடயங்களைசேகரிக்க,தொடங்கலாம். .(சர்வதேசதமிழர்,அவற்றை,ஒருங்கிணைக்க உதவும். தகவல் தருக!)

1934இலிருந்து இலங்கை இந்திய பத்திரிகைகளில் வந்த அரசியல்,வரலாறு,இலக்கியம்,புதைபொருள்ஆய்வு சமயம்,கல்வி,கலை பற்றிய விடயங்களை சேகரிக்க தொடங்கிய இவர், ஈழகேசரி 1930–56 பிரதிகளையும் சேகரித்துள்ளார்.

பல்கலைகழகம்,பத்திரிகைஅலுவலகம்,நூலகம் என புகுந்து விடயங்களை பிரதி பண்ணி பத்திரப்படுத்திவிடுவார்,இவர்! 1895–1997வரையான பல விடயங்கள் இவரிடம் உண்டு. தமிழர் இலங்கை முழுவதும்,விஜயன் வரமுன்,பரவி வாழ்ந்ததற்கான ஆதாரங்களும் இவரிடமுண்டு. பொலனறுவ,காலி,குருணாகல என பல இடங்களில் ஈஸ்வரங்கள் அமைந்திருந்ததை காட்டும் ஆவணங்களும் உண்டு.

சிங்களநாடகங்கள் தமிழர் தெருக்கூத்துகளின் வழிவந்தவை! என சிங்களநாடகாசிரியர் சரத் சந்திரா ஆங்கிலத்தில் எழுதியதைக்காட்டுகிறார்.வியந்துபோகவைக்கிறது.வரலாற்றை மாற்றி அமைப்போர்க்கு இது ஒரு பதிலடியாகவிளங்கும். தமிழர்கள் அரசியல்,வரலாற்று அனாதைகளல்ல,என்பதை இக்காப்பகம் விளக்கும்.

ஈழதமிழர் பிரபலகேலிசித்திரகலைஞர் சிரித்திரன்.சுந்தரின் தமிழர் சமுதாய சீர்திருத்த காட்டூன்கள் சுமார் 1000 கண்காட்சிக்குவைக்கப்பட்டிருந்தது குறுகியநேரம் கண்காட்சித்தலைப்புகளை,காணமட்டுமே போதுமானது. கணனிவெப்சைட் தான் ஆய்வாளருக்கும் ஆர்வலருக்கும் எதிர்காலத்தில் மிகமிக உதவும்.கணனியில்



பதித்துதவிய ஜெயசந்திரன்,பிரேம்ராஜ் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள். கனடாவின் ரொறன்ரோ,ஸ்காபரோவில் மெற்ரோ கொம்யுனிகேசன் சென்ரறில் நடந்த கண்காட்சியை பிரிட்டிஷ்கொலம்பிய பல்கலைகழக டாக்டர் பிரண்டா பெக் உட்பட பலர் பாராட்டியுள்ளனர்.

உலகத்தமிழ்ப்பண்பாட்டுக்கழகத்தை 1974ல் யாழ்உலகதமிழராய்ச்சிமாநாடு நடந்தபோது,டாக்டர்.சாலை இளந்திரையன்,தனிநாயகஅடிகள்,பேராசிரியர் இர.ந.வீரப்பன் உதவியுடன் இரா.கனகரத்தினம்,நிறுவினார்.

அரசியல் சார்பற்று நடுநிலையாகவே இயங்கவிரும்பும் இவருக்கு, சகல தமிழர்களும் தமது ஒத்துழைப்பை மேலும் அளிக்கவேண்டும்.இந்த ஆவணகாப்பகம் உலகத்தமிழர்களின் ஒரு பொதுஉடமையாக எதிர்காலத்தில் விளங்கவேண்டும்.இதுபோல் பல்வேறு துறைகளிலும் தமிழ் இளையசமுதாயம் பலமொழிகளிலும் வெளிவரும் தமிழர்பற்றிய விடயங்களை இப்போதே சேகரிக்கதொடங்கவேண்டும்.உதாரணமாக அண்மையில்,டாக்பிளாத–பத்திரிகையில்,தமிழர் இன்றேல் வார்டோநகர் இயங்காது! என நகர முதல்வர் தமிழர் பற்றி பாராட்டிக்கூறியது,அவர்கள் கடின உழைப்பாளிகள்!அவர்களால் தான் தொழிற்சாலைகள் முன்னேற்றமாக இயங்குகின்றன! என கூறியமை வரலாற்றில் பதியப்படவேண்டியவை. கண்காட்சியில் நீலபெருமாள் எனும் தமிழர்பரம்பரையில் வந்த சிங்கள ஜனாதிபதி சந்திரிகா, தம்பிமுதலியார் வழிவந்த சிங்கள ஜனாதிபதி ஜெயவர்தனா ஆகியோர் பற்றியவிபரங்கள் சிந்திக்கவைக்கின்றன.

றினிடாட்,டுபாகோ,மாடினிக்,குவாட்லோப் முதலியஇடங்களில் தமிழர்வாழ்வது,அங்குசென்றவர்களது அனுபவம்,தமிழ்மொழி மறைவு எம்மை வியக்கவும்,சிந்திக்கவும்வைக்கிறது!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கிழக்கு-ஐரோப்பியநாடுகளும் நோர்வேயும்!

ஜனநாயகமேம்பாடு,சூழல்பாதுகாப்பு,ஏனைய நிதி,வர்த்தக,கட்டமைப்பு,சுகாதார–சமூக,கல்வி–ஆராய்ச்சி,மனிதாபிமான உதவி,போன்றவையே இங்கு முக்கியஒத்துழைப்பாக நோர்வேக்கும்,கிழக்குஐரோப்பியநாடுகட்குமிடையே உள்ளது. 1995ல் சனநாயகமேம்பாட்டுக்கு25மிலியன் குரோணர்,சூழல்பாதுகாப்புக்கு 129மிலி.,வர்த்தகதுறை,சக்தி,மீன்பிடி,விவசாயம்,பிறதொழில்துறைகட்கு104மிலி.,கட்டமைப்புத்துறை 40மிலி.,சுகாதார–சமூகதுறைக்கு11மிலி.,கல்வி–ஆராய்ச்சிக்கு 18மிலி.,மனிதாபிமானஉதவி 2.5மிலி,பாரன்பிராந்தியஒத்துழைப்புக்கு 26மிலி.என,நிதிபயன்படுத்தப்பட்டது.

ரஷ்யா,எஸ்லாந்த்,லத்வியா,லித்துவேனியா(பால்டிக்நாடுகள்),போலந்து,அல்பானியா,ரோமானியா,செக்,சிலவாக்கியா,உக்ரைன், கங்கேரி என பலநாடுகள் இவ்வுதவியை பெற்றன,நீண்டநோக்கில்,கம்யூனிசப்பிடியிலிருந்து விடுபட்டு சீர்படும் நாடுகளுக்கு,சனநாயக,பொருளாதாரஒத்துழைப்பை வழங்குவதே இத்திட்டநோக்காகும்.

1992ல் நோர்வே பாராளுமன்றில் இத்திட்டஅனுமதி வழங்கப்பட்டது.1992–95காலப்பகுதியில்,1233மிலி.குரோணர் கிழக்குஐரோப்பியஒத்துழைப்புக்கென ஒதுக்கப்பட்டது.

வடமேல் ரஷ்யா,பால்டிக்நாடுகள்,போலந்து ஆகியவையே முதன்மைபெற்றநாடுகள் எனினும் பிற கிழக்குஐரோப்பிய நாடுகளும் உதவிபெற்றன.வெளிநாட்டமைச்சு,மற்றஅமைச்சுகளின் வழிகாட்டலுக்கமைய இப்பிரதேசங்களில் திட்ட வேலைகட்கு நிதி உதவி வழங்கப்படுகிறது.ஒவ்வொரு திட்டத்திற்குமென நிரந்தரமாக, விடயங்களைகையாள்தல், மதிப்பிடல் என வழிமுறைகள் உள்ளன.திட்டங்களை ஒருங்கிணைக்க வெளிநாட்டமைச்சில் கிழக்குஐரோப்பிய அலுவலகம்உண்டு.பொது,தனியார்துறையில் அடிப்படை தகைமையை கட்டிஉயர்த்தல் முதலாமிடத்தைபெற்றதாக இங்கு உள்ளது.ஒத்துழைப்புக்கான சந்தர்ப்பங்களை கண்டறிதல்,கட்டமைப்புகளை கட்டியமைக்கமுதலிடல்,உற்பத்திதுறைகளை ஆரம்பித்தல் என்பன முதலாவதுநிலையில் செய்யப்பட்டவையாகும்.

1995ல் பல திட்டங்கள் பூரணப்படுத்தலுக்கு வந்துள்ளன. நோர்வே கம்பனிகள்,அமைப்புகளுக்கிடையே இது குறித்து நெருங்கிய ஒத்துழைப்பு காணப்பட்டது.குறைந்தளவான பாரியதிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. சர்வதேசநிதிநிறுவன முதலீட்டு வழிவகைகளும் பயன்படுத்தப்பட்டன.

1994ல் கிழக்குஐரோப்பிய செயற்றிட்டங்களுக்கு நிதிஉதவிபெற்ற சகலதிட்டங்களும் வெளியார்துறை நிபுணர்களால் ஒழுங்கான முறையில் மதிப்பீடுசெய்யப்பட்டன.1995ல் அந்தந்த திட்ட இடங்களில் கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.வடரஷ்யா,பால்டிக்நாடுகள்,போலந்து என 50திட்டங்கள் உள்ள இடங்களிலேயே இவைமேற்கொள்ளப்பட்டன. 1992–95காலப்பகுதியில் மொத்தம் ஒதுக்கப்பட்ட 860மிலியன்குரோணரில்,சனநாயகமேம்பாட்டுதிட்டங்கட்கு 106மிலி. குரோணர், சூழல்பாதுகாப்புக்கு175மிலி.,வர்த்தகத்துறைஒத்துழைப்புக்கு315மிலி.,கட்டமைப்புகளை அமைக்க111மிலி., கல்வி,ஆராய்ச்சி,சுகாதார,சமூகதிட்டங்கட்கு 102மிலி.என நிதி பயன்படுத்தப்பட்டது.மீதி மனிதாபிமான,பாரன்பிராந்திய திட்டங்கட்கு பயன்படுத்தப்பட்டன.மொத்தநிதியில் 40வீதம் வடமேல்ரஷ்யாவுக்கும்,25வீதம் பால்டிக்நாடுகட்கும்,10 வீதம் போலந்துக்கும் என பயன்படுத்தப்பட்டது.70வீதமான,உதவிபெறுபவை தனியார் நோர்வே கம்பனியாகவோ, தனியார் நோர்வேஅமைப்பாகவோ இருந்தன.அதேபோல் திட்டங்களிலும் அரைவாசிபங்கு கிழக்குஐரோப்பியதனியார் கம்பனிகளை ஈடுபடுத்திஇருந்தன.கிழக்கில் உள்ள புதிய தனியார்துறைகுழுக்களை இந்த திட்டம் எட்டியிருப்பது, ஒரு புதியபாதையை முந்தியகம்யூனிசநாடுகட்கு காட்டிநிற்கின்றன.இத்திட்டத்தின் முக்கியஅம்சம் தகைமையை வழங்கல் ஆகும்.வர்த்தகதுறை ஒத்துழைப்பில் 80வீதம் தகைமைவழங்கலையே முக்கியமாகமாக கொண்டுள்ளது. 1992–95க்கான இத்திட்டமதிப்பீடு நோர்வே பாராளுமன்றத்தில் (பா.அறிக்கை எண்.47)சமர்ப்பிக்கப்பட்டது. தொலைநோக்கும்,பலன்தரும்ஒத்துழைப்பும் என்பனவே இங்கு முக்கியசொற்களாகும்.

இங்கு முதலீடு,ஏற்றுமதிகடனுக்கான உறுதிப்படுத்தும்நடைமுறையும் முக்கியமானதாக விளங்குகிறது. மத்தியநிர்வாகத்திடமிருந்து மட்டும் அல்லாது,பிறஅமைப்புகளிடமிருந்தும் குறுங்காலகடன்களை உறுதிப்படுத்தும் நடைமுறைகள் ஏற்கப்பட்டு நடைமுறை இலகுவாக்கப்பட்டுள்ளது.(Norway-East.Europe Co-operation)

## சன் டி.வி.செல்வி ராதிகா பாலாவுடன் ஒரு சந்திப்பு!........புதுச்சேரி ச.வேல்முருகன்

இலங்கையில் பிறந்து,போரின்அவதியால் தாய்நாட்டைத்துறந்து,சென்னைக்கு வந்து,வளர்ந்து,படித்து,தற்போது சன் டிவி.தனியார்தொலைக்காட்சியில் அறிவிப்பாளராகவும்,நிகழ்ச்சிதயாரிப்பாளராகவும் விளங்கும் செல்வி.ராதிகா பாலா அவர்களை 'சர்வதேசதமிழருக்காக' சந்தித்தேன்.சர்வதேசதமிழர் வாசகர்களை சந்திப்பதில் மகிழ்ச்சிகொள்ளும் அவர் தன்னைப்பற்றி இவ்வாறு கூறினார்:(அவரது வளமான எதிர்காலத்துக்கு சர்வதேசதமிழரின் வாழ்த்துக்கள்!!)

சென்னை வந்த எம்குடும்பத்தில் அம்மா,அப்பா,பாட்டி,3அண்ணன்மார்,1அக்கா உள்ளனர்.நான் கே.கே.நகரில் மேல்நிலை படித்து,காயிதே மில்லத் கல்லூரியில் வணிகவியல்பட்டம் பெற்றேன்.சன்டிவியில் மார்கட்டிங் எக்ஸிகியுடிவாகப் பணிபுரியும் திரு.முருகன் அவர்கள்மூலம்,அறிவிப்பாளராகசேர்ந்தேன்.சமையல்கலை,நலந்தானா,நீங்கள்கேட்டபாடல்,சந்திப்போமா?,சூப்பர்சீன்ஸ்,புதியகீதம்,புதியபூவிது,பாட்டுக்குபாட்டு போன்றநிகழ்ச்சிகளை செய்திருக்கிறேன்.பெண்கள் விடுதலை,கர்நாடகசங்கீதம்,பரதநாட்டியம்,பழையதமிழ்பாடல்கள் போன்றவற்றிலெல்லாம் ஆர்வம் உண்டு.நிகழ்ச்சிஇயக்குனராக வரும் ஆவல் உண்டு.என்வளர்ச்சியில் இயக்குனர் கலாநிதிமாறன்,வைஷாலி,சதீஷ்,அண்ணன் ரவி ஆகியோர்க்கு மிகமுக்கியபங்குண்டு.என்னைவிட்டு,கனடா சென்ற தோழியின்நினைவே மிகவும்வாட்டுகிறது! என்றார்.

திரைக்கலைஞர்:பிரசாந்த்;சேலம்:இராசமாணிக்கம்;திருச்சி:ஜான்ராஜ்தேவர்; டாக்டர் சாந்தி மதுரை: இரா. இரவி:க.இலக்குமணசுவாமி புதுச்சேரி:ச.வேல்முருகன் கல்கத்தா: பி.சத்யநாராயணன்; டெல்லி:சுந்தரேசன்,ரவி ராமானுசம்,கதிர்.சம்பத்குமார் கேரளா: ச.வெள்ளிங்கிரி; டாக்டர்.லோகாம்பாள் சுந்தரம்,கைதராபாத்: என்.ஆர்.இலட்சுமணன்; பெங்களூர்:இரா.ப.முரளி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கேட்டீர்களா சேதி.....!

1 இலங்கைதமிழர்க்கென திமுக(25லட்சம்),மதிமுக(20லட்சம்),எம்ஜிஆர் அதிமுக(76000)கல்பாக்கம்ஊழியர்(20000)என 1996ல் சேகரித்துகொடுத்த பணத்தை சென்னைசெஞ்சிலுவை டில்லிக்கு அனுப்ப,அதனை சுவிஸ் பிராங்காக,மாற்றி ஜெனிவா,தலைமையகத்துக்குஅனுப்ப அவர்கள் தமது கணக்கில் சேர்த்துக்கொண்டார்களாம்.காலவிரயம்,பணவிரயம்,நிர்வாக விரயம் மட்டுமன்றி,நேரடியாக பக்கத்தேயுள்ள சகதமிழருக்குகூட உதவி அனுப்பமுடியாதநிலை தமிழக,மத்தியஅரசுகளின் கையாலாகாத்தனமே! என பலர் குறைப்பட்டுள்ளனர். தமிழகத்திலுள்ள ஈழஅகதிகட்காவது இந்தஉதவிகிட்டியிருக்கலாம். அல்லது தமிழ்அகதிகள்புனர்வாழ்வு கழகம்,போன்ற உள்ளூர்உதவிஅமைப்புகளிடம் உதவிவழங்கப்பட்டிருப்பின் அவதிப்படுபவர்கட்கு உடனடியாகவே கிடைத்திருக்குமாம்!

2 ஒஸ்லோவிலுள்ள இந்தியதூதரகம் தமிழர்களிடமிருந்து மேலதிகமாக 200குரோணர் விசாகட்டணத்துடன் (160)அநீதியாக அறவிடுகிறதாம். காரணமாக இந்தியாவில் உங்கள் பெயரை,செக் பண்ணவேண்டும், ரெலக்ஸ்க்கு காசு என,காரணம் கூறப்படுகிறதாம். சமயதலங்களுக்கு செல்லவிரும்பும் இந்து,கிறித்தவ,முஸ்லிம்,யாத்திரிகர் பலர் மனமுடைந்து இதுபற்றி கவலை தெரிவித்தனர்.நோர்வேஜியர் உடனே மலிவாகவிசா பெற,தமிழர் நோர்வே பாஸ்போட் இருந்தும்,அதிககட்டணம் செலுத்தியும்,விசா இழுத்தடிக்கப்படுகிறதாம்.சிலருக்கு விசாவுமில்லை! காசுமில்லையாம். மேலதிககட்டணம்,குறித்து எதுவித உத்தியோகபூர்வ,தகவல்பிரசுரங்களும் கூட இல்லையாம்.இதுபற்றி முறையிடவிரும்புவோர் தங்கள்கடிதங்களை எமக்குஅனுப்பின் அவை இந்திய,நோர்வே வெளிநாட்டமைச்சர்கட்கு அனுப்பிவைக்கப்படும்.

3 தமிழ்அகதிகள் 13பேரை பின்லாந்த் சுவீடன் ஊடாக தலா 60000 குரோ. பெற்று நோர்வே கடத்திவந்த 5 தமிழர்கள் 3–16மாதசிறைக்கண்டனை,பெற்றனர்.

4 கரால்ட்(23வயது)கெமிர்(27)எனும் இரு நோர்வேஜியஇளைஞர்கள் நோர்வேயிலிருந்து,சைக்கிளில் புறப்பட்டு கிழக்கு ஐரோப்பியநாடுகள்,துருக்கி, ஈரான்,பாகிஸ்தான்,இந்தியா,பூட்டான், நேபாள்,சீனா வரை சென்று,பின்பு ரான்ஸ்சைபீரியன் ரயில் மூலம் நோர்வேயை வந்தடைந்தனர்.மற்றவர்கள் கலாசாரத்துக்கு மதிப்பு,பணிவு,நாமே பெரியவர்–எனும் மமதைஇழந்தமை வறியவர்களின் அன்பு,நட்பு,மற்றவர் பற்றிய,கரிசனை என்பன மறக்கமுடியாத பாடம்!என கூறியுள்ளனர்.

5 நோர்வேஜியர்–குடியேறியோர் பற்றிய ஆய்வுஒப்பீட்டில் தொழில் சங்கம்–அமைப்புகளில் அங்கத்துவம்:49.4வீதம்–36வீதம்,ஆகவும்,பொழுதுபோக்கு,ஓய்வு:94.5–73.4வீ, செலவுகளால் கஷ்டம்:4.5–4.1வீ, வீடுவாங்கையில் புறக்கணிப்பு:0–16வீதம்,உயர்கல்வி: 34வீ–தமிழர் 22வீ,வியட்நாமியர் 7.8 வீ,துருக்கியர் 12.8வீதம்,படித்தவர்களில் வேலைபெற்றோர்:87வீ–54வீதம் (25வீ வேலையில்லை)ஆகவுமுளது உள்ளூராட்சி–தொழில்அமைச்சால் யூகோசிலாவியர்,துருக்கி,ஈரான்,பாகிஸ்தான்,வியட்நாம்,இலங்கை,சோமாலியா எரித்திரியர் என 2561பேரிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

6 நோர்வேஜியர்களிடையே நடாத்தப்பட்ட ஆய்வில் வாழ்வின்மகிழ்ச்சிக்குக்கு எதுமுக்கியம்? என கேட்க, இறங்குவரிசைப்படி பின்வருவன வற்றுக்கு முக்கியமளித்து பதில் கூறியுள்ளனர்: 1வது–ஆரோக்கியம், 2–ஸ்திரமான குடும்பவாழ்வு,3–நண்பர்கள்,4–காதல் வாழ்வு,5–மதிப்பாகவாழ்தல்,6–ஆர்வமானதொழில்,7–ஒழுங்கானபொருளாதாரம்,8–செக்ஸ்,9.நல்ல உடலமைப்பு 10.பொழுதுபோக்கு,11.குழந்தைகள், 12.போதிய பணம்

7 இத்தாலியபாசை,பயில 300 புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. ஆர்வமுள்ளவர்கள் சர்வதேசதமிழரை தொடர்புறுக!

8 புகைபிடித்தலுக்கு எதிரானகருத்து புகைப்படபோட்டி,நடைபெறவுள்ளது 5.5.97 முடிவுதேதி.தொ.பேசி:22248990

9 நோர்வேயில்,பாவித்தகடதாசி,350000 தொன் பயன்படுத்தப்படாதுள்ளதாம். பிறிரெக்ஸ் எலிவேற்றர்– எனும் அமைப்பு,மக்கள் சேகரித்துகொடுத்த கடதாசிகளை என்னசெய்வது? என எண்ணி திண்டாடுகிறதாம்.

10 தகவல்தொழிநுட்ப கணணிகண்காட்சி செக்.நாட்டில் நடக்கவுள்ளது ரெலிபக்ஸ்:420.5.41153057

11 தாய்வான் ஏற்றுமதிவிர்த்தகஅபிவிருத்தி கருத்தரங்கு தாய்பேயில் நடக்கவுள்ளது.ரெ.பக்ஸ்.88627251314

12 சர்வதேச விளம்பரவிழா,23–28யூனில் கானஸ்ஸில் நடைபெறும்.போட்டிப்படம்,புகைபடம்–போஸ்டர் அனுப்ப பார்வையாளராக போக தொடர்புறுக: பக்ஸ்:00.44.171.636 6086

13 கப்பலில் பயிற்சிபெற கப்பல்பாடசாலைக்கு விண்ணப்பிக்கலாம். Stiftelse Skoleskipet Chr.Redich, PB.666,Sentrum,0106 Oslo

14 ஸ்கான்.:.பக்ட் நிறுவனம் சுவிடிஷ்காரிடம் நடாத்தியஆய்வில்,73வீதமானோர், நோர்வேஜியர் நல்லவர்கள் எனவும்(59வீதமானோரே,டானிஷ்காரர் நல்லவர்கள் என கூறியுள்ளனர்.), அத்துடன் 76வீதமானோர் நோர்வேஜியரின் அரசியல்நன்று எனவும், ஆரோக்கியமானவர்கள் என 63வீதமும்,ஆக்கபூர்வமானவர்கள் என 60 வீதமும்,தேசப்பற்றுமிக்கவர்கள் என 85வீதமும்,முயற்சிஉள்ளவர்கள் என 59வீதமும்,குதூகலஉணர்வுள்ளவர்கள் என 58வீதமும்,ஒழுக்கமுள்ளவர்கள் என 58வீதமும், தனித்தன்மையானவர்கள் என 56வீதமும்,செக்ஸியானவர்கள் என 32வீதமும்,ஆர்வமற்றவர்கள் என 26வீதமும்,சோம்பேறிகள் என 15வீதமும் கூறியுள்ளனர்.

15 அன்னைபூபதி கலைக்கூட 5வது ஆண்டுவிழா 22.03.97ல் ஒஸ்லோ சமூகஇல்லத்தில்(சம்புன்குச)மாலை வெகுசிறப்பாகநடைபெற்றது.பல்வேறுபோட்டிகளில்,பங்குகொண்டுவெற்றி பெற்ற,சிறார்கட்கு யாழ்.வண.பிதா. இமானுவல்,யோகன்சன் புஸ்ராட்,பரிசில்கள் வழங்கினர்.தமிழர் மனம்மகிழ பல கலைநிகழ்ச்சிகளும் நடந்தன.

16 இளம்சிறுவர் விஞ்ஞானிகட்கான சுயமான ஆய்வு,விசேடபணி,மனிதாபிமான,சமூக,விஞ்ஞான,தொழிநுட்பஆய்வு,நீர்ஆய்வு,சுயாதீனமானகட்டுரை போட்டிகள் நோர்வேயில் நடந்தது.

ரஷ்யா/மாஸ்கோ: முருகேசம்பிள்ளை ஆர்.சுகுமார் சவுதிஅராபியா/ அல்.கதில்: அ.நிக்சன் றியாட்: பி.யோகநாதன்
ஜித்தா:எஸ்.காளிதாஸ் துபாய்: நஜீர் முகமது.ஏ. பாஹ்ரெயின்:அப்துல்கனி: எம்.ஐ.ரபீக் ஓமான்:எஸ்.கண்ணன்.கணேசலிங்கம்
சுவீடன்:எம்.என்.பாலாஸ்; பி.ஜெகதீசன்: ஜேர்மனி:க.செந்தில்;0230478452;த.புவனேந்திரன்: 0230474391; நெதர்லாந்த்:எஸ்.அருள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

டென்மார்க்:ச.யோகேந்திரம்;வ.க.பரமநாதன்; பிரான்ஸ்: பற்குணராசா.த.தர்மசீலன்1.43759171; இ.கிருபானந்தன், இ.கந்தசாமி
இலங்கை: கொழும்பு: வி.கங்கைவேணியன்41.684549 விதுரன்; க.சண்முகலிங்கம் பி.ஏ.எல்.எல்.பி;மா.தேவகௌரி பி.ஏ.சிறப்பு
கைதையூரான் குமரகுருபரன் பி.காம்.;சுகந்தி தில்லையம்பலம் யாழ்ப்பாணம்:பி.ஹம்சானந்தி; மட்டக்களப்பு: க.சபாரத்தினம்;

## ஈழத்தமிழர் அவலத்தை உலகுக்கு அறியத்தருவோம்!

# கோரபடகு விபத்தின் சோக எதிரொலிகள்!

இராணுவத்தினரின் நடவடிக்கைகள் தொடரத் தொடர தமிழ் மக்களின் அவல வாழ்வும் அநியாய அழிவுகளும் தொடர்ந்து கொண்டே செல்கின்றன. யாழ்.மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதும் மக்கள் தமது உடைமைகள் யாவற்றையும் விட்டு விட்டு உயிரைப்பாதுகாப்பதற்காக வன்னி பெரு நிலப்பரப்புக்கு இடம் பெயர்ந்து வந்தனர். வன்னி பெரு நிலப்பரப்பில் ஓரளவு திருப்தியுடன் சிறுகுடிசைகளை அமைத்து மிகுந்த இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருந்தனர். கிளிநொச்சியில் இடம் பெற்ற ''சத்ஜெய'' இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து மீண்டும் இடப்பெயர்வு ஏற்பட்டது. வன்னி பெரு நிலப்பரப்பில் ஏற்பட்ட இடம் பெயர்வு யாழ். மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மிகவும் வேதனைக்குள்ளாக்கியது.

வன்னி பெரு நிலப்பரப்பில் யாழ்.மாவட்ட மக்கள் இடம் பெயர்ந்து சொல்லொணாத் துயரங்களுக்கு ஆளாகிறார்கள். அத்தியாவசியமானதும் அடிப்படைத் தேவைகளுமான உணவு, உடை, உறைவிடம் யாவும் கேள்விக்குறியானது. வைத்திய வசதி மோசமானது. சுகாதார வசதி சீர்கெட்டது. மக்களுக்கு வேண்டுமென்றே துன்பங்களையும் துயரங்களையும் கொடுக்கவேண்டுமென்ற போக்கில் வன்னி பெருநிலப்பரப்பில் மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு, அத்தியாவசியமான உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு போன்ற சகல தட்டுப்பாடுகளும் உண்டாக்கப்பட்டன. நெருப்புக் காய்ச்சல், மலேரியா, செப்ரிசிமியா போன்ற பல தரப்பட்ட நோய்களும் வேகமாகப் பரவின. நோயாளர்கள் வைத்திய சாலைகளுக்கு சென்றால் மருந்துகள் கிடையாது. வைத்தியசாலைகளில் டாக்டர்கள் பற்றாக்குறை, இடவசதி இல்லாமை, சகலதரப்பட்ட ஊழியர்களும் பற்றாக்குறை, இப்படியான இடைஞ்சல்களுக்கும் இன்னல்களுக்கும் அம்மக்கள் ஆளாகிறார்கள். காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட குழந்தைகள், சிறுவர்கள், வயோதிபர்கள், ஆண்கள், பெண்கள் என நூற்றுக்கணக்கானோர் மரணமாகிறார்கள். கர்ப்பிணித் தாய்மார்கள் பலர் மரணமானதுடன் பல சிசுக்களும் இறந்தன. பலர் கால்கள் நடக்க முடியாத நிலைமைக்கு ஆளானார்கள்.

இந்நிலையில் வன்னி பெருநிலப்பரப்பில் இராணுவத்தினரின் இராணுவ நடவடிக்கையும் ஆரம்பமானது. உயிரைப்பாதுகாக்க வந்த மக்கள் பல இழப்புகளுடன் மீண்டும் வன்னி பெரு நிலப்பரப்பில் இருந்து இடம்பெயர ஆரம்பித்தனர்.

இடம்பெயரத் தொடங்கியவர்களில் ஒரு பகுதியினர், ''செத்தாலும் பரவாயில்லை, எமது ஊரில் எமது வீட்டில் சாவோம்'' என்ற நிலைமையில் யாழ்.மாவட்டம் சென்றனர். ஒரு பகுதியினர் தென்பகுதியில் வாழலாம் என்ற எண்ணத்துடன் வவுனியா முகாம்களுக்குச் சென்றனர். இன்னும் சிலர் வவுனியாவில் வாழ்வதற்கென வந்தனர். இந்த இருபகுதியினரும் வவுனியாவில் முகாம்களில் (தடுப்பு முகாம்களில்) தடுக்கப்பட்டனர். மற்றையவர்கள் எது வந்தாலும் வரட்டும் என்ற நிலைமையில் வன்னி பெருநிலப்பரப்பில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இந்த வகையில் வன்னி பெருநிலப்பரப்பிலுள்ள வலைப்பாடு, நாச்சிக்குடா, மூன்றாம் பிட்டி ஆகிய இடங்களில் இருந்து பலரும் தமிழகம் செல்வதற்கு முயற்சிகள் மேற்கொண்டனர். இந்நிலையில் மன்னார் கடற்பரப்பில் வலைப்பாடு துறைமுகத்துக்கு அண்மையில் இரண்டாவது படகு விபத்து கடந்த மாதம் 19ஆம் திகதி புதன்கிழமை இரவு 6.45 மணியளவில் இடம் பெற்றது. இந்த இரண்டாவது படகுவிபத்தில் 93 பேர் மரணமானார்கள். இந்தக் கோர நிகழ்வு உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது.

வலைப்பாடு கடற்பரப்பில் இதற்கு முன்னர் ஒரு முறை நடந்த படகுவிபத்தில் 16 பேர் கடலுக்கு இரையானார்கள். இந்தச் சம்பவம் நடந்த மூன்று மாதங்களுக்குள் இரண்டாவது படகு விபத்து இடம் பெற்றுள்ளது. இரண்டு சம்பவங்களும் ஒரே கடற்பரப்பில் இடம் பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### குடும்பம் குடும்பமாக மரணம்

யாழ்.மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்துவந்து புதுக்குடியிருப்பு, விசுவமடு, உடையார்கட்டு, பாண்டியன் குளம், வவுனிக்குளம், மல்லாவி, துணுக்காய், கரியாலை, நாகபடுவான், முழங்காவில், வலைப்பாடு ஆகிய இடங்களில் தற்காலிகமாக குடிசைகள் அமைத்து இருந்தவர்களே தமிழகம் செல்லும் போது மரணமானவர்கள். குடும்பம், குடும்பமாக மரணமாகியுள்ளனர்.

வலைப்பாடு துறைமுகத்தில் இருந்து இந்திய மீனவர்களுக்கு சொந்தமான மீன்பிடிப்படகில் இவர்கள் சம்பவதினம் தமழகம் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய சம்பவ தினத்துக்கு ஒரு வாரத்துக்கு முன்பே இம்மக்கள் தாம் வசித்த இடங்களில் இருந்து இப்பகுதிக்கு வந்து சேர்ந்தனர்.

கடலுக்கு இரையாகப்போகின்றோம் என்பதை உணராத, வாழவேண்டிய பச்சிளம் குழந்தைகள், சிறுவர்கள், சிறுமிகள், இளைஞர்கள், யுவதிகள், நடுத்தர வயதானவர்கள் என பலதரப்பட்டவர்களும் தமிழகம் செல்ல போகிறோம் என்ற மகிழ்ச்சியில் மூழ்கி இருந்தனர். படகு பிரயாணத்துக்கு வந்த இவர்களில் அநேகமானவர்கள் வெளிநாடுகளில் உள்ள தமது குடும்ப உறுப்பினர்களின் ஏற்பாட்டின்பேரிலேயே தமிழகம் செல்ல வந்திருந்தனர்.

மனைவியர் தம் பிள்ளைகளுடன் தமிழகம் சென்று பின்னர் கணவன்மார்கள் இருக்கும் இடங்களுக்கு செல்வதற்கு வந்திருந்தனர். தாய், தந்தையர் வெளிநாடுகளிலுள்ள தமது பிள்ளைகளிடம் சென்று வாழ்வதற்காக வந்திருந்தனர். சில யுவதிகள் தமக்கென வெளிநாடுகளில் நிச்சயிக்கப்பட்ட இளைஞர்களிடம் சென்று இன்பகரமாக வாழ்வதற்கு வந்திருந்தனர். அதே போல் சில இளைஞர்கள் தமக்கென நிச்சயிக்கப்பட்டு வெளிநாடுகளில் வசிக்கும் யுவதிகளுடன் இணைந்து வாழ்வதற்குச் செல்லும் நோக்கத்துடன் வந்திருந்தனர். இவர்களின் எதிர் பார்ப்புகள் எப்படியெல்லாம் இருந்திருக்கும் என்பதை அனைவராலும் உணர்ந்துகொள்ள முடியும்.

சம்பவதினம் (19-2-97) காலையில் இருந்து வலைப்பாடு துறைமுகம் பெரும் கலகலப்பாக இருந்தது. அன்றைய தினம் மினிபஸ்கள், மோட்டார் வண்டிகள், ஆட்டோக்கள் ஆகிய வற்றின் மூலம் பிரயாணிகள் வந்து குவிந்த வண்ணம் இருந்தனர். பயணம் செய்பவர்களை வழியனுப்ப வந்தவர்களும் அநேகர். இப்படியாக கலகலப்படைந்திருந்த வலைப்பாடு துறைமுகம் ஒரு சில மணித்தியாலத்துக்குள் அவலக் குரல் கேட்கும் இடமாக மாறியது.

படகில் ஏற ஆயத்தமான பிரயாணிகள் தமது நெருங்கிய உறவினர்கள், இணைபிரியாத நண்பர்கள் ஆகியோரிடமிருந்து விடைபெற்றனர். ஏற்கனவே திட்டமிட்டபடி இரண்டு இந்திய இழுவைப்படகுகளிலும் ஏறுவதற்காக தமது பெட்டி, படுக்கைகளுடன் பிரயாணிகள் முண்டியடித்தனர். முதல்படகில் சுமார் 100 பேர் வரை ஏறியதும் [illegible] படகோட்டிகள் படகை இயக்[illegible]கொண்டு தமிழகம் நோக்கி சென்றனர்.

இரண்டாவது படகில் சுமார் 130 பேர் வரையில் ஏறி இருப்பார்கள். பயணிகள் ஏற ஏற பயணிகளின் பொதிகளும் ஏற்றப்பட்டது. படகில் அளவுக்கு அதிகமான பயணிகளுடன் பொதிகளும் ஏற்றப்பட்டன. படகோட்டிகள் நல்ல மதுபோதையில் காணப்பட்டனர். படகு அங்கும் இங்கும் அசைந்தாடியது. இந்த இழுவைப்படகு (ரோலர்) இருக்கைகளைக் கொண்ட பஸ்வண்டியை போன்ற அமைப்பைக் கொண்டது. இயந்திரம் இயங்கும் அறையுடன் சுமார் 60 பேர் வசதியாக அமர்ந்துசெல்லக்கூடிய இருக்கைகளை இது கொண்டுள்ளது.

பயணிகளை ஏற்றும்போது ஏற்கனவே ஏறி இருந்த பயணிகள், ''ஆட்கள் போதும். சாமான்களும் கூடுதலாக இருக்கின்றது. அதனால் தொடர்ந்து ஆட்களை ஏற்றவேண்டாம்'' என படகோட்டியிடம் முறையிட்டனர். நல்ல மதுபோதையில் இருந்த படகோட்டிகளுக்கு பயணிகளின் முறைப்பாடு காதுகளுக்கு எட்டவில்லை. இப்படியாக தொடர்ந்தும் ஆட்கள் ஏற்றப்பட்டதுடன் மேலே கூடாரத்திலும் சுமார் 30 பேர் வரை ஏறினார்கள். படகோட்டிகள் இருவர் உட்பகுதியில் இருந்து இயந்திரத்தை இயக்க ஆரம்பித்தனர். மற்றைய நான்கு படகோட்டிகளும் மேலே கூடாரத்தில் இருந்த மக்களுடன் இணைந்து கொண்டனர்.

அளவுக்கு அதிகமான ஆட்களுடனும், பொதிகளுடனும் ரோலர் படகு பலத்த சத்தத்துடன் புறப்பட்டுச் சென்றது. ஒரு மைல் தூரம் வரை படகு சென்றவேளையில் படகின் புறப்பெல்லர் (விசிறி) மண்திட்டியில் சிக்கிக் கொண்டது. புறப்பெல்லர் மண்திட்டியில் சிக்கிக் கொண்டமையினால் படகு வேகமாக பின் நோக்கித் திரும்பியபோது, படகு திடீரெனக் கவிழ்ந்தது. படகு கவிழ்ந்ததும் எல்லோரும் கூக்குரலிட்டு அலறத்தொடங்கினார்கள். படகுக்குள் அறைபோன்ற இடத்தில் அடைக்கப்பட்டிருந்தவர்கள் வெளியே வரமுடியாமல் சிக்கித் தவித்தனர். மூழ்கிய படகுக்குள் இருந்த எல்லோரினதும் மூச்சும் ஒரு சிலநிமிட நேரத்தில் அடங்கி விட்டது. கூடாரத்தின் மீது இருந்தவர்களுள் அநேகர் இளைஞர்களாக இருந்தமையினால் சுமார் 30 பேர்வரையில் உயிர்தப்பியுள்ளனர். இப்படகில் பயணம் செய்தவர்களின் முழுமையான விபரம் சரியாக இதுவரை தெரியவில்லை.

இந்நிலையில் இப்படகில் இருந்து எழுந்த அவலக்குரல்களும். படகு திடீரென கவிழ்ந்த ஓழயும் அருகாமையில் மீன்பிடித்துக்கொண்டிருந்தவர்களின் கவனத்துக்கு எட்டியது. அவர்கள் உதவிக்கு வந்தனர். கடலில் நீந்திப் பழக்கப்பட்ட பல இளைஞர்களும் நடுத்தர வயதினரும் நீந்திக் கரைசேர்ந்தனர். சிலர் தொடர்ந்து நீந்த முடியாமல் வழியில் தெரிந்த 'களம் கண்டி'களில் பிடித்துக்கொண்டு அவலக் குரல் எழுப்பினர். பின்னர் மீன்பிடித்துக்கொண்டிருந்தவர்களினால் அவர்கள் காப்பாற்றப்பட்டனர்.

இரவு நடந்த இந்நிகழ்ச்சி வலைப்பாடு கடற்கரைப்பகுதியில் காட்டுத்தீபோல் பரவியது. இதனைத் தொடர்ந்து பல மீன்பிடிப்படகுகள் இச் [illegible]

நன்றி: Virakesari 05th March - 1997

www.tamilarangam.net

# இசையும் தமிழும்

**திருமதி த மனோகரன், BA (cey)**

உலகில் எல்லா ஜீவராசிகளையும் தன்பால் ஈர்க்கும் சக்தி வாய்ந்தது இசை. இதனால் "இசை கேட்டால் புவி அசைந்தாடும்" என ஒரு கவிஞர் பாடியுள்ளார். இசை மூலம் உணர்ச்சியை நன்கு வெளிப்படுத்த முடியும். மக்களை உணர்ச்சி வசப்படுத்த முடியும். இதனால் திரைப் படங்களில் நன்கு உணர்வை வெளிப்படுத்த வேண்டிய கட்டங்களில் இசையையே பயன் படுத்துகின்றனர். இசை செவி வழியோடி நமது உணற்சி நரம்புகளை மீட்டுகிறது. நாம் எந்த விதமான இசையைக் கேட்கிறோமோ அந்த விதமான உணர்வு நம் உள்ளத்தே எழுகிறது. நல்ல இசையைக் கேட்கும் போது உள்ளத்தில் ஒரு ஆத்ம சுகம் ஏற்படுகிறது. தாயின் தாலாட்டில் குழந்தை சுகமாக உறங்குகிறது. இசைக்கு இறைவனே அடிமை என்பதைப் புராண இதிகாசங்கள் உறுதிப் படுத்துகின்றன.

இந்த இசையின் தொன்மை எத்தகையது என்பதைப் பார்ப்பது அவசியம். இன்று இலண்டனில் பல தமிழ்ச் சங்கங்கள் தோன்றித் தமிழை வளர்ப்பது போல கி.பி. முதன் மூன்று நூற்றாண்டு காலப் பகுதியில் மதுரையில் தமிழ்ச்சங்கம் தோன்றித் தமிழை வளர்த்தது. இதனைச் சங்க காலம் என்பர். இது தமிழ் இலக்கிய வரலாற்றின் ஆரம்ப காலம். இக்காலத்து எழுந்த நூல்களாகிய பெரும்பாணாற்றுப் படை, சிறுபாணாற்றுப் படை, கல்லாடம், பரிபாடல் ஆகியவற்றில் இசை பற்றிய குறிப்புகள் பரந்து காணப்படுகின்றன. அகத்திய முனிவர் இசைத் தமிழ் இயற்றமிழ் நாடகத் தமிழ் ஆகிய முத்தமிழையும் கற்றுணர்ந்து அகத்தியம் என்னும் முத்தமிழ் இலக்கண நூலை எழுதியுள்ளார். எனவே இசை அன்றிலிருந்து இன்று வரை தனக்கென்றொரு தனியிடத்தைப் பிடித்து வளர்ந்து வருகிறது.

இதனையடுத்த சங்கம் மருவிய காலம் எனப்படும் இலக்கிய வரலாற்றின் இரண்டாவது கால கட்டத்தின் பிற் பகுதியில் (கி.பி. 6ஆம் நூ.ஆ.) எழுந்த ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் இசை நடனம் பற்றிய விபரங்கள் மட்டுமன்றி சமய வழிபாட்டு முறைகளைப் பற்றியும் தெளிவாக எழுதப் பட்டுள்ளது. இலக்கியங்கள் ஊடாக அந்தக்காலச் சமுதாய நிலையைக் காணமுடியும். இந்தக் காலத்தைப் போலவே அந்தக் காலத்திலும் அரங்கேற்றங்கள் சிறப்பாக நடை பெற்றன என்பதற்கு அதில் வரும் முக்கிய கதா பாத்திரமான மாதவியின் அரங்கேற்றம் சான்றாக உள்ளது. அரங்கேற்றம் ஒரு முக்கிய நிகழ்ச்சி என்பதை வலியுறுத்துவதைப் போல இளங்கோவடிகள் அதற்கு ஒரு தனி அத்தியாயத்தையே "அரங்கேற்று காதை" என ஒதுக்கி அதில் வரும் கலைஞர்கள் எத்தன்மையராக இருந்தார்கள் என்பதை அழகாகக் கூறுகிறார்.

மாதவியின் தாயான சித்திராபதி தன்மகள் மாதவிக்கு ஐந்து வயதிலிருந்தே ஆடல் பாடல் ஒப்பனை ஆகிய மூன்றையும் தக்க குருவிடம் பயிற்றுவித்தாள். பன்னிரண்டாவது வயதில் அரங்கேறும் தகுதியைப் பெற்றாள் மாதவி. சோழ மன்னன் அரச சபையில் இந்த அரங்கேற்றம் நடை பெற்றது. இதனை நடாத்திவைத்த ஆசானும் பக்கவாத்தியக்காரரும் மிகவும் திறமை வாய்ந்தவர்கள். ஆடல் ஆசான் அகக் கூத்து புறக் கூத்து (ஒருவர் காண ஆடுவது அகக் கூத்து. பொது மக்கள் காண ஆடுவது புறக் கூத்து) இரண்டின் இலக்கணத்தையும் நன்கு அறிந்தவர். பதினொருவகை ஆடல்களையும் (அல்லி, கொட்டி, குடை, பாண்டரங்கம், மல்லாடல், துடியாடல், கடையம், பேடு, மரக்கால், பாவைக் கூத்து) அவற்றிற்கு ஏற்ற பாடல்களையும், பக்க வாத்தியங்களில் எதற்கு எது பொருத்தமானது, எதற்கு எது சிறந்தது என்பதைத் தெரிவு செய்வதிலும், மரபு வழி வந்த விதி முறைகளிலும் தெளிந்த அறிவு கொண்டிருந்தார். தான் பயிற்றுவர் அவ்வண்ணமே ஆடவைக்கும் வல்லமை வாய்ந்தவர்.

இசையோன் நடனத்திற்குப் பொருத்தமான வாத்தியங்களில் தேர்ந்த அறிவும் பாட்டின் பொருளை உணர்ந்து பாடும் தன்மையும், சொற்களைப் பொருள் புலப்பட உச்சரிக்கும் ஆற்றலும் உடையவராகத்திகழ்ந்தார்.

அடுத்து நாட்டியப் பாடல்களை எழுதிய புலவனைப் பற்றிக் குறிப்பிடும் போது இளங்கோவடிகள் -

> "இமிழ்கடல் வரைப்பில் தமிழகம் அறியத்
> தமிழ் முழுதும் அறிந்த தன்மையனாக"

என அழகாக வர்ணிக்கிறார். அதாவது தமிழில் முழுமையான அறிவுடையவராகவும் தமிழர் அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் பாடல் இயற்றும் தன்மையர் ஆகவும் இருந்தார் என்பதாகும். (பிற்காலத்தில் பாரதியார் வலியுறுத்திய கொள்கை முன்பும் இருந்தது என்பதைக் காட்டுகிறது) அத்துடன்

மாத்தளை: எம்.அருள்பிரகாஸ்: தவ.சஜிதரன் திருகோணமலை:மதுமாரி .செ.கனகரத்தினம் கண்டி: எஸ் .மயில்வேந்த ன்: அட்டன்:பாலா சங்குப்பிள்ளை:குவைத்:முகமதுகவுஸ்: வி.எம்.லிங்கன்: கவிற்சலா ந்த்:எஸ்கதிர்காமநாதன்: 41.12724336: இரா. கலாதரன்:அமெரிக்கா: செ.பாஸ்கரன்: அவுஸ்திரேலியா:பத்மா ஞானப்பிரகாசம்தென் கொரியா:ஏ.யு.எல்.ஏ.ஹில்மி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொற்ஸ்வானா:கமலா.வேலுப்பிள்ளை புருணை: வி.எஸ்.சிவகுமார் யப்பான்:டாக்டர்.சச்சி ஸ்ரீகாந்தா சிங்கப்பூர்:மு.பத்மா மலேசியா:க.மாணிக்கவாசகர்,க.கணேசன் அருண் பேராசிரியர்.இர.த.வீரப்பன் இந்தோனேசியா: மெடான்:நாகலிங்கம்; மு.சந்திர சேகரன்; யகார்த்தா:திருமதி.மணி தாய்லாந்து:பாங்கொக்:வே.நாகராஜா புக்கற்:மெ.வேலு;நா.சங்கரன் பர்மா:அப்துல் ரசாக்

பாடுபவரின் பண்ணுக்கும் பக்கவாத்தியத்துடனும் இணைந்து போகும் வகையில் ஏற்ற இனிய சொற்களைக் கையாண்டு அதேநேரம் இலக்கண நெறிக்கமையப் பாடல்களை இயற்றினார் என்றும் கூறப்படுகிறது. அத்துடன் நடனத்திற்கு இன்றியமையாத வாத்தியமான மிருதங்கத்தை வாசிப்பவர் அந்தக்கலையில் ஆழ்ந்த அறிவுடையவராக இருந்தார். பாட்டிற்கும் நடனத்திற்கு ஏற்ப மட்டுமின்றி யாழ், குழல் போன்ற ஏனைய வாத்தியங்களின் இசைக்கு மிகுந்து போகாதபடி இதமாக வாசிக்கும் திறனுடையவராகவும் இருந்தார். மற்றும் குழல் இசையாளர் (நாதஸ்வர வித்துவான்) பாட்டிற்கும் ஏனைய வாத்தியங்களுக்கும் இசைய, பண்ணின் தரம் குன்றாது இராக இலக்கணத்திற்கு வழுவாத, தாளக்கட்டுப்பாட்டிற்கு அமைய இசைத்தார். யாழிசை வித்துவானைப்பறறிக்கூற வந்த ஆசிரியர் ஏழு சுரங்களைப்பற்றியும். அதன் மாறுமதன்மையினால் பலவகைப் பண்கள் (இராகங்கள்) உண்டாகின்றன என்பதை நன்கு விரித்துரைக்கிறார். இன்று சரிகமபதநி என்று வழக்கிலிருப்பவை வடமொழிச்சுரங்கள். (சட்சம் காந்தாரம் மந்தியமம் பஞ்சமம் தைவதம் நிசாதம்) இவை தமிழில் குரல், துத்தம், கைக்கிளை. உழை. இனி விளரி தரம் எனப்பட்டன என்பதை அறியக் கூடியதாக இருக்கின்றது. ஏழுசுரங்களையும் யாழினில் மீட்டும் போது இராகத்தின் பண்பு குறையாமலும் நரம்பகளின் அடைவு கெடாமலும் இனிமையாக இசைத்தார் யாழிசை வித்துவான்.

பக்கவாத்தியக்காரரைப்பற்றிச் சொல்வதுடன் இளங்கோவடிகள் நின்றுவிடாமல் நாட்டிய அரங்கு (மேடை) எவ்வாறு அமைக்கப்பட்டு அப்போது என்னென்ன அம்சங்கள் கவனிக்கப்பட்டன என்பதை அழகாக எடுத்துரைக்கின்றார். மேடை அமைக்கப் பொருத்தமான இடம், தூண்களாக வைக்க வேண்டிய இடம், தூன்களாக வைக்க பொருத்தமான மூங்கில்கள், துண்களில் நிழல் மேடையில் விழாதவாறு ஒளிவிளக்குகள் (இன்றிருப்பதைப்போல மின்விளக்குகள் இல்லாவிட்டாலும் அக்காலத்திலும் இதற்கு முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது). போகவர வாயில்கள் பக்கங்களுக்குத்திரைச்சீலைகள், மேடையை அழகுபடுத்த முத்துமாலைகள், தோரணங்கள், இன்னும் இன்னேரன்ன அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன. இத்தகைய, அரங்கில் மாதவி வலதுகாலைத் தூக்கி வைத்து ஏறினாள். தெய்வத்துதிப் பாடல்களைப்பாடி ஆடினாள். மாதவியின் அழகைக் கூறவந்த ஆசிரியர் – பொன்னால் செய்யப்பட்ட பூங்கொடியொன்று மேடையேறி நின்று ஆடியது என்கிறார். மாதவியின் நாட்டியத்திறமையை மெச்சி சோழ மன்னன் அவளுக்குப் பட்டமும் பரிசும் அளித்துக் கௌரவித்தார்.

இந்த இருபதாம் நூற்றான்டின் இறுதிப்பகுதியில், மனிதர் நாகரிகத்தின் உச்சக்கட்டமாக இருப்பதாக எண்ணிக்கொண்டிருக்கும் வேளையில், தமிழர் உலகெலாம் பரந்து வாழும் ஒருகாலகட்டத்தில், எங்கெலாம் வாழ்ந்தாலும் எமது கலை கலாச்சாரத்தை விடமாட்டோம் என்று ஆர்வமுற்று நிற்கும் ஒரு சூழ்நிலையில், ஒரு வருடத்தில் பல அரங்கோற்றங்கள் நடக்கின்றன. இதே வேளையில் ஏறத்தாள 1400 வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற அரங்கேற்ற நிகழ்ச்சி எவ்வாறு நடைபெற்றது என்பதைக் கவனத்தில் கொண்டு வருவது பொருத்தமானது அல்லவா? நமது மூதாதையர் கலைக்கு ஆழமாக அத்திவாரம் போட்டிருந்த படியால் எந்நிலையிலும் நலிவுறாமல் வளர்ந்தே வந்துள்ளது. இதனை பேணிப்பாதுகாத்தல் நம் தலையாய கடமை ஆகும். எமது இளம் தலைமுறையினர் இக்கலைத்துறையில் காலை உறுதியுடன் பதிக்க இவ்வரங்கேற்றங்கள் உதவும் என்ற நம்பிக்கையுடனேயே பெற்றோர்கள் செயற்படுகின்றனர். இதற்குப் பெரியோர்கள் தமது நல்லாசிகளை நல்கியும், ஆக்கபூர்வமான அறிவுரைகளை வழங்கியம், கலைஞர்களும் தமது பங்களிப்பைத் தவறாது செய்தும், ஊக்குவித்தல் இன்றியமையாததாகும். கலையினூடாக கலாச்சாரத்தையும் வளர்க்க முடியும். இன்று மனிதசமுதாயம் அறிவுத்துறையில் அளப்பரிய முன்னேற்றம் கண்டாலும் ஆத்மீகத் துறையில் பின்னோக்கிச் செல்வதையே காணமுடிகிறது. இசைக்கும் இறையுணர்வுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஊட்டச்சத்துள்ள உணவு உடலுக்கு உரமளிப்பதுபோல சிறந்த இசை உளநலத்தை வளர்க்கிறது. ஆத்மாவுக்குச் சாந்தியளிக்க வல்லது. எம்மை இறைவழிப்படுத்த வல்லது. மனித சமுதாயத்தை ஈடேற்ற வல்லது.

---

நாவாந்துறையைச் சேர்ந்த நன்றாக நீந்த, சுழியோடத் தெரிந்த கடற்தொழிலாளியும் இக்கடற் பரப்பில் பல தடவைகள் பயணம் செய்தவருமான சந்தியோ மரியராசா (வயது 48) என்பவர் தமது மனைவி மக்களுடன் இப்படகில் பயணம் செய்தார். படகு கவிழ்ந்ததும் தனது திறமையினால் வெளியே வந்த இவர் தனது மனைவியையும் மருமகளையும், 4 பிள்ளைகளையும் தேடினார். நீந்தமுடியாமல் கால்கள் கயிற்றுக்குள் சிக்கிய நிலையில் தவித்துக் கொண்டிருந்த தனது இரண்டு ஆண்பிள்ளைகளையும் மற்றும் ஒரு பெண்மணியையும் இவர் காப்பாற்றினார். ஆயினும் தனது மனைவியையும் மற்றும் இரண்டு ஆண்பிள்ளைகளையும் மருமகளையும் இவர் பறிகொடுத்தார்.

பல மீட்புப்படகுகளின் உதவியுடன் உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருந்த சிலரும் மீட்கப்பட்டனர். குற்றுயிராக இருந்தவர்கள் வேரவில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

**சாசாராயாக**
**சடலங்கள்**

மீட்புப்படகுகள் ஒன்றன்பின் ஒன்றாக இரவு 8 மணியில் இருந்து உயிரற்ற உடல்களை கரைக்கு கொண்டுவந்தன. வலைப்பாடு துறை முகத்தில் இருந்து சுமார் 1 மைல் தொலைவிலுள்ள வேரவில் அரசினர் வைத்தியசாலைக்கு சடலங்கள் கொண்டு செல்லப்பட்டன. வைத்தியசாலையில் வரிசையாக அடுக்கிவைக்கப் பட்ட பச்சிளம் குழந்தைகள், இளைஞர்கள், யுவதிகள், நடுத்தர வயதுடைய ஆண்கள், பெண்கள் ஆகியோரின் சடலங்கள் கல் மனதையும் கலங்கவைத்தன. சொந்தம், நண்பர்கள், அயலவர்கள் என்றபேதமின்றி அங்கு குழுமியிருந்த அனைத்து மக்களும் சோகம் பெருக்கெடுக்க கதறியழுதனர். ''கடவுளே எமது தமிழ் சமுதாயத்துக்கு எங்கு சென்றாலும் இந்தக் கதியா?'' என பலரும் வாய்விட்டு புலம்பினர்.

அடையாளம் காணப்பட்ட சடலங்களுள் 52 பெண்களும், 32 ஆண்களும் இருந்தனர். 1 வயதுக்குட்பட்ட 4 குழந்தைகள், 2 வயதுக்கும் 10 வயதுக்கும் இடைப்பட்ட 19 சிறுவர், சிறுமிகள், 12 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப் பட்ட முப்பத்தி மூன்று இளைஞர்கள், யுவதிகள், முப்பது வயதுக்கும், ஐம்பது வயதுக்கும் இடைப்பட்ட 12 பேர், ஐம்பது வயதுக்குமேற் பட்ட 16 பேர் உட்பட மொத்தமாக 84 பேர் அடையாளம் காணப்பட்டனர். இவர்களின் சடலங்களை உறவினர்கள் வியாழன் மாலை தமது இருப்பிடங்களுக்கு கொண்டு சென்றனர். சடலங்களை கடலில் தேடி எடுப்பதற்கும், வீடுகளுக்கு கொண்டு செல்வதற்கும் பல வழிகளிலும் பொதுமக்கள் பெரும் உதவி புரிந்தனர்.

**வி.ரி.கதிர்காமநாதன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலாபநோக்கின்றி சேவைநோக்கில் ;பலரது அரசியல்,சமூக,சமய,கருத்துக்களைத்தாங்கிவரும் நடுநிலைச்சஞ்சிகை இது.
ஜன நாயகம்,மனிதஉரிமை,சுதந்திரம்,சமாதானம்,நீதியுடன் கூடிய தமிழர் முன்னேற்றம்,ஐக்கியம் கருதுவதே நம் பணி!
தமிழார்வலர்,எழுத்தாளர்,கல்லூரி,பொதுநூலகமுகவரிகள் தந்துதவுக! தகவல்சேவையில் உங்கள் நாட்டு விபரங்கள் பகிர்க!

**சர்வதேசதமிழர்கவியரங்கு**

**கண்டனப்பொங்கல்**

சர்க்கரைப்பொங்கலோ
விசமாய்மாறியது–ஆம்
இனிக்கவில்லை கசந்தது!
வெண்பொங்கலோ
வெண்மையாயில்லை–ஆம்
கருமையாய் மாறியது!
சுவைதரும் கரும்போ
கடினஇரும்பாய் மாறியது–ஆம்
வெட்டியகத்திதான் உடைந்தது!
முக்கனியில் மூன்றாவது
வாழைத்தாரோ இளமையாக
பச்சைக்காயாகவே இருந்தது–ஆம்
கனிய மறுத்தது!
பொங்கலிட நெய்யை
நெருப்பிலிட்டேன்–உறைந்த
நெய் கரையவில்லை–ஆம்
கல்லாக மாறியது!
இவைகள் ஈழத்தமிழர்
படுகொலைக்கு
கண்டனம் தெரிவிக்கின்றனவோ?
இது கண்டு பொங்கியதுஉள்ளம்!
மகிழ்ச்சி பொங்குமா இல்லம்?

**கவிஞர்.சொல்லரசு,**
**செயலர்-கம்பன்கழகம்,சேலம்**

---

**இளைஞனே வா!**

காலம் காலமாய் கனவுகளை
மட்டுமே சொந்தமென
நம்பியிருந்த நம்மினம்,

கம்பியூட்டரைக்கூட
சாதகம் கணிக்கக்
கற்றுக்கொடுத்த நம்மினம்,

அரிதார புருசர்களை
அவதார புருசர்களாக
வணங்குவதற்கு பழக்கப்பட்டிருந்த
நம்மினம்,

இப்போதுதான்,இங்குதான்
கொஞ்சம் தன்னம்பிக்கையுடன்
சிந்திக்கவும் செயல்படவும்
ஆரம்பித்திருக்கிறது!

நம்மினத்தின் கண்போன்ற
இளைஞனே! புயலென வா!
புதுமைகள் காணவும்
புத்துலகம் படைக்கவும்
களமொன்று காத்திருக்கிறது
எழுச்சியுடன் எழுந்துவா!
வாழத்துடிக்கின்ற சமூகத்தின்
வளர்ச்சிக்கு வித்திடுவோம்!

**கணபதி கணேசன்-மலேசியா**

---

**யாவர்க்குமான பாதையில்**

உன்னை தோள்களில் சுமப்பதால்
நீயென் அரசனே!
நானுனக்கு அடிமையே
எனது விழியிரண்டை மூடி
இருந்தும் இல்லாதவனாக்கி
மேடுபள்ளங்களில் வழிநடத்துகிறாய்
பாதை சரியல்ல! என்றுணர்ந்தேன்
சுமந்தறியாத நீ எப்படி
என் வலி அறியப்போகின்றாய்?
உரைத்தேன் நான்
விடுதலை என்பதில்
எனக்கும் பங்குண்டு
வேடம் களைந்து கீழிறங்கிவா
பொதுவில் இருவரும்நடந்து
நல்லூர்போய் சேர்ந்திடலாம்!

**புதுச்சேரி ச.வேல்முருகன்**

---

**விடுதலை வித்து நேதாஜியே!**

விடுதலைக்கு வித்திட்ட வீரர்
படுகுழியில்அன்னியரைதள்ளிட்டசூரர்
அடுபுலியாய்அணங்கினைஆக்கியவர்
கடுமணியாய்விடுதலைஒலித்திட்டவர்

படைஒன்று தந்திட்டவீரர்–உடன்
விடைதந்துவெள்ளையரைவிரட்டிட
மடைதிறந்தவெள்ளமாய் வந்தவர்
நடைசிறந்தவீரர்களை அளித்தவர்

வெளிநாட்டில் படைஅமைத்த தீரர்
ஒளிதந்துஇருள் நீக்க வந்தார்
உளிக்கூராய் தீட்டியே வந்தார்
துளிகண்ட ஈட்டியே தந்தார்

தில்லி செல்ல தந்திரமும்கண்டார்
வல்லியரும்மகிழ்ந்திடவும் வந்தார்
மெல்லியரும் ஒன்றாக சேர்ந்தே
சொல்லியதை செய்யக்கற்றுத்தந்தார்

நூறாண்டுவீரர் நினைவை நாமும்
பாராண்டு காட்டி நடந்தே இன்றும்
ஊராண்டதலைவர் முதலாம்என்றும்
நூறாண்டு நாளில் மகிழ்வோமே!

**என்.ஆர்.இலட்சுமணன்-ஆந்திரா**

**கொடுமைகள்!**

நாய்கள் கவ்வாமல் இருக்க
தோலைபோர்த்திய எலும்புக்கூடுகள்
.........................பசியின்கொடுமையால்
பேய்கள் அண்டாமல்இருக்க
சாமிமாரின் யாகங்கள்
.........................ஏமாற்றுக்கொடுமையால்
தாய்கள் வனப்புடன்இருக்க
புட்டிப்பாலருந்தும் சிசுக்கள்
.........................அழகின்கொடுமையால்
சேய்கள் வளமுடன்இருக்க
பெற்றவர்களோ பரிதவிப்புடன்
.........................பாசக்கொடுமையால்
பாய்கள் இணையாமல்இருக்க
பெரியோர்களின் முட்டுக்கட்டை
..............வரதட்சணைகொடுமையால்.

**மு.முகமதுகவுஸ்-குவைத்**

---

**வெளியே சொல்லாத காதல்..!**

விபரம் இல்லாமல்
எழுதும் கடிதம் கூட
ஊர்போய் சேர்ந்துவிடும்!
விலாசம் இல்லாமல்
எழுதும் கடிதம்
வீட்டை வந்தடையாது!
அதுபோல்.......
வெளியே சொல்லாதகாதல்
உரியவரிடம் சென்றடையாது!

**ரூபியஸ் சுகுமார்-மாஸ்கோ**

---

**முதிரும் பெண்பழங்கள்!**

நான்மட்டுமா நான்கடிச்சுவருள்
கன்னியாய்....அடைபட்டிருப்பது?
மூச்சுக்காற்றும் வெளியேவர
அசிரத்தையாக....பெற்றவரே!
கொஞ்சமாவது சிந்தித்தீர்களா?
அழகுடன் கொட்டிக்கொடுக்க
பணமிருந்தும்..........!
வரன் வர தட்டிக்கழிப்பதும்
ஆசையிருந்தும்.......!
ஓ! நான்ஓர் உழைக்கும் இயந்திரம்!
இங்கு பணம் காய்க்கும் மரம்!
இன்னும் உங்களுடன்......!
அப்பாவின் முதலெழுத்துடன்
பெருமூச்சுக்காற்றுடன்
இளமைஆசைகள்ஆவியாக
ஓ! நீங்கள் கூறுவது......!
இவளுக்கு என்றொருவன்
இன்னமும் பிறக்கவில்லையாம்!

**மதுமாரி-----------இலங்கை**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலக விளிம்பில் தமிழன்!

சீ. அருணாசலம்
பகாவ்
மலேசியா

என் அன்பிற்குரியவர்களே !
சற்று மௌனமாய் இருங்கள்
இங்கே ஒரு தமிழன்
பேசிக் கொண்டிருக்கின்றான் !

நண்பா !
வேங்கையைக் கண்டு
வேடிக்கைப் பார்த்தவர்களா நாம்...
வீரத்திற்கென்றே
விளையாட்டு வைத்தவர்கள் !
புலியின் பல்லில்
புதுமணம் புரிந்தவர்கள் !

போருக்கென்றே
புறநானூறு பாடியவன் தமிழன் !
மஞ்சு விரட்டும்...
புலி நகமும்...
நமக்குப் புதுமையல்ல
அவை நம் வரலாற்றைப் போல்
நீளமானது !
எங்களூா
பாட்டியின் காதுகளைவிட\வா
உங்கள் வீரம் நீளமானது !
நாங்கள்
* சிவப்புக்களையே கிண்ணத்தில்
போட்டு இடித்தவர்கள் !

*பாட்டிமார்கள் வெற்றிலை இடிக்கும் நிகழ்வு;
சிவப்பு நிறம் புரட்சியின் எழுச்சியாக கருதப்படுகின்றது*

என் இனிய நண்பர்களே !
சில்லறைக்காக
சிரிப்பை விற்கும் உலகில்
புன்னகைக்காக
புதுப்பாட்டுப் பாடியவன் தமிழன் !
நமக்கு ஒரு பழிச்சொல் உண்டு...
நாம் பகலுக்காக
இரவைத் தொலைத்தவர்களாம் !
அவர்களுக்குத் தெரியாது
நாம் இரவுக்காக...
பகலில் கவிதை எழுதியது !

நாங்கள்
வரலாற்றுச் சுவடுகளுக்கு

வண்ணம் தீட்டியவர்கள் !
எலும்பிற்கும்...
"எழு" என்பதைக் கற்றுக் கொடுத்தோம் !

திரைகடல் ஓடியும்
திரவியம் தேடென்று
பொருளாதாரச் சிந்தனைக்குப்
பொட்டிட்டோம் !
முத்துக் குளியலுக்கு
முத்தமிட்டோம் !
எங்களை ஏமாற்றியது
எவரென்று தெரியாமலேயே
ஏலமானோம் !
ஒன்று சொல்லட்டுமா ?
நாங்கள்
மிக மிக அன்பானவர்கள்
நட்பிற்காக நாட்டையே கொடுத்தது
இந்தத் தமிழனைத் தவிர வேறு யாருண்டு !
பண்பாட்டு உச்சத்தில்
பல்லாங்குழி ஆடினோம் !
மாட்டுக்கும் நாங்கள் மாண்பு கொடுத்தோம்
பொங்கல் எங்களது
பக்குவத்தின் பறைசாற்றல்லவா ?

கத்தியும் கருவிகளும்
அஃறிணையேயன்றி
உயர்திணையல்ல என்றவர்கள் நாம்!
நண்பனே!
சில்லறைகளால்....
எங்களைச் சிறையிட முடியாது!
முரசுகள் இன்னும் ஒலிக்கவில்லை
கடல் அலைகளின் அறைகூவலுக்கு
மதிப்புரை எழுதிகிறோம்!

என் அருமைத் தமிழனே!
நாம் வரலாற்றைத் தொலைத்தவர்கள்
மூன்று தலைமுறை தாண்டிய
முப்பாட்டன் பெயர் தெரியவில்லை!

எல்லாரும்
சற்று எழுந்து நில்லுங்கள்!
இந்த நூற்றாண்டைக்
கையில் ஏந்தியவர்கள்
அடுத்த நூற்றாண்டிற்காக
தோள்களைச் செதுக்குபவர்கள்
வருகிறார்கள்!!!

நண்பர்களே!
எல்லாரும் வாருங்கள்
அடுத்த நூற்றாண்டிற்கான
காற்றை...
* இதயம் என்னும்
இறைச்சித் துண்டிற்குள் சேகரிப்போம்!!!

உலகினைப் புரட்டியோர்
புதுவாழ்வு படைத்திட
எழுதுகோல் இங்கோர்
நெம்புகோல் ஆகட்டும்!

*(* சிராச் என்னும் உருதுக் கவிஞனின் வரி)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஈழத்தில் பேய்கள்.

எங்கள் தமிழ் ஈழமண்ணில்
பேய்கள் நிக்குது
தங்கத் தமிழ் இனத்தினைக்
கொன்று தின்னுது
சிங்கள த்தின் கொடியெங்கள்
மண்ணில் பறக்குது
எங்கள் தமிழ் வேதாளங்கள் -சில
துணை நிக்குது
கொஞ்சும் தமிழ் ஈழமண்ணும்
சுடு காடானது
பஞ்சத் திலே எங்களினம்
வெந்து சாகுது
பிஞ்சு களும் பேய்களுக்கு
இரையானது-அவர்
நெஞ்சு தனைப் பிழந்து தினம்
வெட்டிக் கொல்லுது
பெண்ணு ருவில் வந்து ஒரு
பேயும் நிக்குது
கண்ணி ரண்டும் கழுகினைப் போல்
பிணத்தைத் தேடுது
தன்னை ஒரு சமாதானப்
புறாவென்றெண்ணுது-எங்கள்
மண்ண தனில் வந்து நின்றே
எம்மைக் கொல்லுது
ஈழ மண்ணில் பேய்கள் தினம்
சுற்றித் திரியிது
கேள்வி கேட்க ஆட்களின்றி
தொல்லை செய்யுது
வேள்வி க்காக வளர்த்துவிட்ட
ஆட்டுக் கடாபோல்-இன்று
கேள்விக் குறி ஆகிறது
தமிழர் வாழ்வும்
கூலிப் படை நாய்களெல்லாம்
பேய்கள் போலவே
கெலி பிடித்து அலையுதிங்கு
பிணங்கள் தேடியே
புலிகள் என்ற போர்வையிலே
தமிழர் தம்மையே
பசி பொருத்து,மகிழும் வயது
பேத மின்றியே
தமிழ் இனத்தின் பெருமை சொல்லும்
யாழ் நகரம்
பேய் இனத்தால் ஆனதிங்கு
ஓர் நரகம்
தமிழ் இனமே வெல்லும் ஒரு
காலம் வரும்-அப்போ
பேய்கள் எல்லாம் தீயினிலே
வெந்து சாகும்!

ஆக்கம்: பொன்.சிவா
எகர்சுண்ட், நோர்வே.
18.06.96.

## மலர்களுக்காய் உதிரும் வண்ணாத்தி !

மலர்களை
நேசிப்பதில்லை ....
நேசிப்பவையெல்லாம்
மலர்களாவதில்லை !

நிழல் பூக்களில்
தங்கமாலைகளில்
தொங்கும்
என் கழுத்து ....

ஆறாத கீறல்களைக்
களிம்பு விரல்களால்
வருடும்
என் கனவுகள் ....

புரையோடியதை
இனிப் பாடப்போவதில்லை

உண்டு ! உண்டு !
சில இதயங்கள்
ஓரிரவு வாடகைக்கு

அந்தத் தற்காலிக்
கூடுகளைவிட
கற்பனைக் கூண்டு
அரியாசனம் போடுகிறது

கூட்டுப்புழுவாய்க்
குறுகியிருந்தேன்...
வண்ணாத்தியாய்
ஏன் இந்தப்
பரிணாமம் ?

கண்ணீரில்
ஏன் நிறம் போகவா ?

வேலுக்குப் பக்கத்தில்
சருகுகளின்
இடைவெளியில் ....
ஒரு சின்ன நிழலுக்காய்
மண்டியிடுகிறேன் ....

மலர்களுக்காய்
நான்
உ
தி
ர்
கி
றே
ன்......

யாரங்கே !

என் கதையைத்
தன் கண்ணீரால்
விசாரிப்பது ?

கணநேர இரக்கத்தில்
கவிதைகூட அட !
காதலனாகிவிடுகிறது

நான்தான்
இற்றுக் கட்டையாய் ....

மலர்களை
நேசிக்கப்போவதில்லை ....
நேசித்தவையெல்லாம்
மலர்களில்லை

ஏ. தேவராசன்
சாமின், மலேசியா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# குரல் இழந்த குயில்

நக்கீரன்

வெள்ளைப் பூ மியில்
வெறுத்துப் போன
விதமான மனிதர்கள்.
கொக்கின் கூட்டுக்குள்
கருங்குயில் என் கூட்டு வாழ்க்கை.
வெறுத்தாலும் வெளியேற முடியாத
வாழ்க்கையிது.
என் ஊர் காகக்கூடு இது வருமா?....

காட்டுக்குள் என் நாட்டுக்குள்
என் நாட்டுக்குள் இருந்து
கூவிய எனக்கு
கொக்கின் கூட்டுக்குள்
வெளிநாடென்னும் பூ ட்டுக்குள்
குரல் செத்து விட்டது.

என் பாடலுக்கு
கரையினிலே கைதட்டி
முத்துப் பற்களால் இன்முகங்காட்டிய
கடலின் அலைகளைக் காணோம்.
காற்றோடு பாட்டிசைக்கும்
நெல்மணிகள் எங்கே?
தலையுயர்த்தித் தனைக்காட்டி
அபயமளித்து ஆத்ம சுகம் தந்த
ஆலயங்கள் எங்கே?
கோவில் மணி கேட்டுக்
கூவி எமை எழுப்பும்
கோழிகள் எங்கே?

இயற்கையை இழந்து விட்டு
எனக்கோர் இரவல் சுகமா?
காகக்கூட்டில் முட்டையிடினும்
அங்கே அடைபட்டதில்லை.
ஆனால் இன்றோ!!!!
பூ ட்டப்பட்ட கொக்கின் பொன்கூட்டுக்குள்
நானோர் பணக்கார அடிமை.
ஊட்டப்படும் உணவெல்லாம் - நாளை
கொக்கின் உணவிற்கா?

பூ ட்டப்பட்ட கூட்டை
உடைக்க இயலாது
திறந்து விட்டாலும் பறக்க இயலாது.
பல வருடங்கள்
பூ ட்டப்பட்டு இருந்ததால்
பாட்டும்,பறப்பும் மறந்து விட்டது.
ஆனால்
என் நினைவுகள் மட்டும்
என் நாட்டில். . . அக்காட்டில்
காகக்கூட்டையே தேடுகிறது.
ஆம். . !
என் நினைவுகளில் தேடுகிறேன்
நான் இழந்து விட்ட இயற்கையை.



**சிந்தனை**

வானம் வன[illegible]படும்போது
பிழியப்படுவது மழை
உள்ளம் வசைப்படும்போது
வெளிப்படுவது து[illegible]க்கம்

காகம் கறுப்பாக இருந்தாலும்
அதன் முட்டை வெண்மையல்லவா
வாழ்க்கை கரடுமுரடாக இருந்தாலும்
குடும்பம் மென்மையல்லவா

நட்சத்திரங்கள் இருப்பதால் நிலவுக்கு
அழகே தவிர அதற்கு இடையூறு அல்ல
நற்செய்திகள் கேட்பதால் வாழ்க்கைக்கு
வளமே தவிர அதற்கு இடையூறு அல்ல.

கோட்டகுப்பம் முகமது
கவுஸ்-குவைத்

**தமிழ்ப்பெண்**

பகைவன் கண்டு மெய்சிலிர்ப்பாள்
தரகைகள் காண மகிழ்ந்திடுவாள்
தகவலும் சொல்ல விரைந்திடுவாள்
ஊரகப் பேரவை சந்திப்பில்

நல்லோரைக் காணத் தவித்திடுவாள்
நலமாக குடும்பம் பேணிடுவாள்
எல்லோரும் தன் மயமாய் கண்டிடுவாள்
பல்வாகத் தொண்டும் ஆற்றிடுவாள்.

அல்லும் பகலும் சோர்வின்றி
ஆலயமும் செல்வாள் குறைவின்றி
புல்லும் கொடுத்து போஷிப்பாள்
பாலகம் போற்றும் ஆவினத்தை

(என்.ஆர். இலட்சுமணன்).

www.tamilarangam.net

நோர்வேயில் தமிழ்மாதசஞ்சிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.பதிவு இல:90/310-ரி.1.எஸ்.சர்வதேசதர தொடர் இலக்க நிலையம்
/யுனெஸ்கோ,பாரீஸில் பதிவுசெய்யப்பட்டது.இல.0805-7443.கணணியால் பிழையின்றி எழுதிய ஆக்கம் உடன் பிரசுரமாகும்.
தரமான ஆக்கங்கள்,ஓவியங்கள்,புகைப்படங்கள்,காட்டூன்கள் மாதாமாதம் அனுப்புவோர்க்கு இலவசசந்தா உண்டு.

## இந்து சமய நம்பிக்கைகள் . . . கிறிஸ்தவ சமய நம்பிக்கைகள்

| இந்து சமய நம்பிக்கைகள் | | கிறிஸ்தவ சமய நம்பிக்கைகள் |
|---|---|---|
| உள்ளார்ந்ததும் எல்லாம் கடந்ததுமாய், படைப்பவராய், வெளிப்படாத உண்மையாய், எங்கும் வியாபகமாக விளங்கும் பேராற்றல் கொண்ட பரம்பொருள் ஒருவரே. | 1 | கடவுள் ஒருவரே; அவர் மூவருள் இருக்கிறார்; தன் படைப்பிலிருந்து அவர் தனிமாறுபட்டு இருப்பினும் காப்பவராகவும் மீட்பவராகவும் தன் படைப்பினோடு மிக அனுக்கமாகத் தொடர்பு கொண்டுள்ளார். |
| ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் முடிவற்ற சுழற்சியில் இந்தப் பிரபஞ்சம் இயங்குகின்றது. | 2 | தெய்வீக சங்கல்பத்தின் பேரில் உலகம் ஒரு நாள் படைக்கப்பட்டது, அது பாவத்தால் அசுத்தமாகியது, எனினும் கடவுளின் அருளால் இறுதி பூரணத்துவத்தை நோக்கி அது நகர்கின்றது. |
| கடவுளுடன் இணைவதற்காகப் பரிணும வளர்ச்சி அடைந்து வரும் எல்லா ஆன்மாக்களும் முடிவில் ஆன்மீக அறிவும் மறுபிறவியிலிருந்து விடுதலை அளிக்கும் வீடுபேறும் அடையும். இந்த முடிவிலிருந்து எந்தவொரு ஆன்மாவும் நிரந்தரமாக விலக முடியாது. | 3 | ஆதாம் செய்த பாவத்தால் மனித குலம் ஆன்மீக வழியிலிருந்து விலகி கடவுளிடமிருந்து பிரிக்கப்பட்டது, கடவுளால் அழைக்கப்பட்டு அவர் அருளை ஏற்றுக் கொண்டோர் நிலையான வாழ்வு வாழ்வர், எதிர்ப்புக்காட்டி புறக்கணித்தோர் என்றும் வழிதவறி நிலையாக வாழ்வர். |
| * ஒவ்வொருவரும் தனது சொந்த எண்ணம், சொல், செயல் மூலம் தன் எதிர்காலத்தினை உருவாக்குகின்றனர். இதுவே வினையும் அதன் விளைவுமாகிய கர்ம நியதி. | 4 | வழிதெரியாத பாவப்பட்டோர் தமது தீய எண்ணம், வாக்கு, செய்கையால் குற்றமிழைத்ததால், அதன் விளைவால் என்றென்றும் துன்பப்படுவோர்கள் கடவுளின் அருளாலும் உதவியாலும் காப்பாற்றப்பட்டு மீட்கப்படுகிறார்கள். * |
| தனது கர்ம வினைகள் யாவும் தீரும் வரை, ஆன்மாக்கள் மறுபிறவி எடுத்துப் பரிணும வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கும். | 5 | மனிதர்கள் ஒருமுறை மட்டுமே இறக்கின்றனர். அதன்பிறகு அவர்கள் தேவதீர்ப்பை எதிர்நோக்குகின்றனர் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. * |
| கண்ணுக்குப் புலப்படாத அக உலகங்களில் தெய்வீக ஆன்மாக்கள் உள்ளன. கோயில் வழிபாடு, கிரியைகள், சம்ஸ்காரங்கள், மற்றும் சொந்த பக்தி ஆகியவற்றின் மூலம் தேவர்களிடமும் கடவுளர்களிடமும் தொடர்பை ஏற்படுத்த முடியும். | 6 | பிரபஞ்சத்தில் ஆவிகள் வாழ்கின்றன. அவற்றில் சில நல்லவை சில கெட்டவை. எனினும் நமது வழிபாடு கடவுளை நோக்கி மட்டுமே இருக்க வேண்டும். |
| எல்லாம் கடந்த பரப்பிரம்மத்தை அறிவதற்கு ஆன்மீக ஒளி பெற்ற சற்குருவும், சொந்த சாதனையும், நல்லொழுக்கமும், மனவழுக்கு அகற்றலும், * தன்னுள்ளே தேடலும், தியானமும் மிகவும் அவசியம். | 7 | இயேசு கிறிஸ்து மூலமும், புனித நூல்களின் மூலமும் கடவுள் தம்மை வெளிப்படுத்தியுள்ளார்; தீர்க்கதரிசிகளையும், தூதர்களையும், விவிலிய பிரச்சாரகர்களையும் கடவுளின் வார்த்தைக்கு இணங்க நம்மை உண்மையாகவும் புனிதமாகவும் வழிநடத்துவதற்கு ஆசிரியர்களாக கடவுள் அவர்களை பரிசுத்த ஆவிமூலம் நியமித்திருக்கிறார். * |
| அஹிம்சையை மேற்கொள்வதன் மூலம் எல்லா உயிர்களும் புனிதமானவை என அவை * அன்புகாட்டி போற்றப்படுகின்றன. | 8 | வாழ்க்கை மிக உயர்வானது என்று கருதப்பட வேண்டும்; என்றாலும் புனித விவிலியத்தின் அன்பும் நீதியும் வாழ்வோடு இணைந்து பின்பற்றப்பட வேண்டும். * |
| எந்த ஒரு தனிப்பட்ட சமயமும், உயிர்கள் உய்ய, தன்வழி ஒன்றின் மூலமே, மற்ற வழிகள் நீங்கலாக, வழிகாட்ட வந்தவை அல்ல. உண்மையான எல்லா * சமயங்களும் இறைவனின் தூய அன்பையும் ஒளியையும் பிரதிபலிக்கும் பட்டைகளே ஆதலால், அவை மதிப்புக்கும் புரிந்துணர்வுக்கும் உரியவை. | 9 | கடவுளின் அவதாரம் இயேசு கிறிஸ்து; எனவே மீட்சிக்கு அவர் ஒருவரே நிச்சயமான வழி. நன்னெறிக் கோட்பாடுகளையும் ஆன்மீக உள்ளுணர்வுகளையும் பல சமயங்கள் போதித்தாலும், இயேசு ஒருவரே வழியாகவும், உண்மையாகவும், வாழ்வாகவும் இருக்கிறார். |

## HINDUS BELIEVE . . . . . CHRISTIANS BELIEVE

| HINDUS BELIEVE | | CHRISTIANS BELIEVE |
|---|---|---|
| in a one, all-pervasive Supreme Being who is both immanent and transcendent, both Creator and Unmanifest Reality. | 1 | in one God in three persons. He is distinct from his creation, yet intimately involved with it as its sustainer and redeemer. |
| that the universe undergoes endless cycles of creation, preservation and dissolution. | 2 | that the world was created once by the divine will, was corrupted by sin, yet under God's providence moves toward final perfection. |
| that all souls are evolving toward union with God and will ultimately find spiritual knowledge and liberation from the cycle of rebirth. Not a single soul will be eternally deprived of this destiny. | 3 | that in Adam's sin, the human race was spiritually alienated from God, and that those who are called by God and respond to his grace will have eternal life. Those who persist in rebellion will be lost eternally. |
| in *karma*, the law of cause and effect by which each individual creates his own destiny by his thoughts, words and deeds. | 4 | that through God's grace and favor, lost sinners are rescued from the guilt, power and eternal consequences of their evil thoughts, words and deeds. |
| that the soul reincarnates, evolving through many births until all *karmas* have been resolved. | 5 | that it is appointed for human beings to die once and after that face judgment. |
| that divine beings exist in unseen inner worlds and that temple worship, rituals and sacraments as well as personal devotionals create a communion with the *devas* and Gods. | 6 | that spirit beings inhabit the universe, some good and some evil; but that our worship is due to God alone. |
| that a spiritually awakened Master is essential to know the Transcendent Absolute, as are personal discipline, good conduct, purification, self-inquiry and meditation. | 7 | that God has given us a clear revelation of himself in Jesus and the sacred Scriptures. He has empowered by his Spirit prophets, apostles, evangelists and pastors who are teachers charged to guide us into faith and holiness in accordance with his Word. |
| that all life is sacred and to be loved and revered, through the practice of nonviolence, *ahimsa*. | 8 | that life is to be highly esteemed but that it must be subordinated in the service of biblical love and justice. |
| that no one religion teaches the only way to salvation above all others, but that all genuine religious paths are facets of God's Pure Love and Light, deserving tolerance and understanding. | 9 | that Jesus is God incarnate, and therefore the only sure path to salvation. Many religions may offer ethical and spiritual insights, but only Jesus is the Way, the Truth and the Life. |

OSTRAT SYSTEMS



**Cassette/CD players,**
**AV / Surround sound-**
**Amplifiers,loudspeakers**
**& Musical Instruments!**

**PIONEER CLD2950**

*...........Skaffes/Selges til markedets beste priser!*
*Sendes over hele landet!*

**YAMAHA DSPA 2070**



**Export inquiries welcome**



**Service-Repair**
*...........med garanti*
*Hi-Fi,Video,Speakers ......*



***சகலதும் மலிவாக திருத்திக் கொடுக்கப்படும்!***

*For all your requirements in Hi-Fi and Musical Instruments!*

OSTRAT SYSTEMS,
Sørligt 8,0577 Oslo,
Norway Tel./Fax:22.684890



*Learing English is Fun!*
*English is Universal!*

* ENGELSK UNDERVISNING*
• ஆங்கிலமொழிப்பயிற்சி*

Trenger de skriftlig eller muntlig opplæring i Engelsk ?
Barn,ungdom,voksne og nybegynnere velkommen!!
Pensum fra 1.klasse t.o.m gymnas nivå
**Undervisningen pågår i Oslo!*
***தொடர்பு கொள்ள வேண்டிய***
***தொலைபேசி : 22.670198***
***(இரவு 8மணிக்கு பின்)***


## *சர்வதேசதமிழர் தகவல்சேவை*

1 ஒஸ்லோ அன்னை பூபதி தமிழ்க் கலைக் கூடம் 5ம்ஆண்டுவிழாவுக்கான,பேச்சுப்போட்டிகள்பாலர்,கீழ்மத்திய,மேல்,அதிமேல்,பிரிவென சிறப்பாகஅதிபர்.சிவதாஸ்,தலைமையில்,2.3.97 நடைபெற்றதுநடுவர்களாக தமிழாசிரியை திருச்செல்வி,கணனிபொறியியலாளர்.ஜெயச்சந்திரன்,சர்வதேசதமிழர்–ஆசிரியர் என்.எஸ்பிரபு ஆகியோர் பணிபுரிந்தனர்.
பிரதமநடுவர்.என்.எஸ்பிரபு,தனது உரையில்: பங்குபற்றுதலேமுக்கியம்!,வெற்றி–தோல்வி சகஜம்!தன்னம்பிக்கை,துணிவு,உற்சாகம், உழைப்பு இளஞ்சிறார்க்கு மிகஅவசியம்! மிதமான வேகம்,அளவானதொனி,அக்கறை, தேவையான ஏற்றஇறக்கங்கள்,சரியானஉச்சரிப்பு,நிற்கும்நிலை,கைஅசைவு,முகபாவனை பொருத்தமான உடை, சுருக்கமும்,தெளிவுமான பேச்சு, தவறுகளை நண்பர்களிடம் கேட்டுத்திருத்திக்கொள்ளல்,என்பன,சிறப்பான பேச்சுக்கு அவசியம்!என்றார். பெற்றோர்கள் பிள்ளைகட்கு சகலபோட்டிகட்கும் ஆர்வமூட்டலாம்,ஆனால்,நெருக்கடி தரக்கூடாது. எனவும் குறிப்பிட்டார்.

2 உலகத்தமிழர் ஆவணகாப்பகத்தின் கண்காட்சி 1.3.97 அன்று ஒஸ்லோ பல்கலைக்கழக,சோபுஸ்லீ மண்டபத்தில்,டாக்டர்.ஓய்வின் புகுலருட்,டாக்டர் பின் தீசன்,ம.அமரசிங்கம் குத்துவிளக்கேற்ற ஆரம்பமாகியது. சுமார் 275 தமிழர்கள் கண்காட்சியை பார்வையிட்டனர்.மாலை இன்ரநெற்–வெப்சைற் சிபிரேம்ராஜ்ஜால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.ஆவண காப்பக ஸ்தாபகர்,குரும்பசிட்டி இரா.கனகரத்தினம்,திருமதி பவளராணி கனகரத்தினத்தின் அயராதசேவையை பாராட்டி ஒஸ்,பல்கலைகழக பேராசிரியர் ந.சண்முகரட்ணம்,டாக்டர்.கிறிஸ்ரியான் ஸ்ரொக்க, டாக்டர் பின் தீசன்,நூலக கல்விபிரிவு இங்கர் கதரினா உரை நிகழ்த்தினர்.
வண.பிதா.இருதயம் நோர்வேதமிழர்சார்பில் பாராட்டுகேடயம் வழங்க,இந்துகலாசாரமன்றம்,தமிழ்சங்கம் சார்பில் அன்பளிப்புகள் வழங்கப்பட்டன.பொதுமக்கள் வழங்கிய அன்பளிப்புகள் நோர்வேயில் உலகத்தமிழர் ஆவணகாப்பகம் அமைய பயன்படுத்தப்படும் என,அமைப்பாளர் யோகராஜா,பாலசிங்கம் கூறினார்.கடந்த 40வருடமாக 8000க்கு மேற்பட்ட,வரலாற்றுசேகரிப்பை செய்த இரா கனகரத்தினத்துக்கும்,அமைப்புக்குழுவுக்கும் சர்வதேசதமிழரின் பாராட்டுக்கள்!
http://www.tamilweb.com/ita/

3 கோட் ஸபிறிங்–எனும் பிரிட்டிஷ் தமிழரால் நடத்தப்படும் ஆங்கிலஇதழ்,கிடைக்கப் பெற்றோம்.எம் இதயபூர்வ பாராட்டுக்கள்!
Hot Spring/Editor.S.Sivanayagam,
10,Allèe De Derrière Les Murs,
95400 Villiers Le Bel ,France

4 தமிழக க.நகைமுகன்–வான்மதி தம்பதியர் மகள்.செல்லரோசாநாச்சியார்,கணணிஅறிவியலாளர்,க.முத்தையாராஜ்,திருமணம் 23.1.97 நடந்தது..சர்வதேசதமிழரின் வாழ்த்துக்கள்!

5 உலகநாட்டு உல்லாசஓட்டல்கள் பற்றிய இலவசமான விபரக் கோவை எப்படி பெறுவது?என்பதை அறிய எழுதுங்கள். (வேலைவாய்ப்புகட்கும் விண்ணப்பித்து முயற்சிபண்ணலாம்–சந்தாதரர்க்கு,மட்டும்!)

6 வரலாற்றில் தமிழீழம்–எனும் தமிழகஉணர்ச்சிக்கவிஞர் சிங்காரவேலனின் எளியதமிழ் நடைநூல் கிடைக்கப்பெற்றோம்.இந்து ஆங்கிலபத்திரிகையில் செ.கணேசலிங்கம் இதற்கு எழுதியவிமர்சனம்(12.11.96) நூலின் தரத்தை விளக்குகிறது,பாட்டாளி மக்கள்கட்சி தலைவர் தீரனின் பாராட்டையும் அன்பையும் கவிஞர் பெற்றுள்ளார்.
ஈழதமிழர்வரலாறு பற்றி சாதாரணதமிழர்களுக்கும்,புரியும்படி எளியநடையில் அமைந்ததே இந்நூலின் சிறப்பு!தமிழ்நாட்டில் ஈழதமிழர்கட்கு ஆதரவுஅளித்துவரும் அன்புள்ளங்களில் கவிஞரும் போற்றுதற்குரியவர் கவிஞர்க்கு,சர்வதேசதமிழரின் பாராட்டுகள்!.
Unarchik Kavignar:Singaravelan,
2,Kaveri salai,Devadanam,Trichy
620002,Tamilnadu,India (pr:40;Rs)

7 மலேசியபத்திரிகை - உயர்வோம்,தமிழக – பெரியார்யுகம்,ஜேர்மனி- பூவரசு –6ம்ஆண்டு இதழ்,எங்கள்இளந்தளிர்கள்,தமிழக – சிற்றிதழ் செய்திஆய்வு இதழ்,லண்டன்,புதியகாரைஒளி நோர்வே – சிறுவர்இதழ்,...ர்நிலா,சாமி.அப்பாத்துரையின் புலம்பெயர்ந்ததமிழன்நூல்–கனடா ஆகியன கிடைக்கப்பெற்றோம்!நன்றி!!

8 தமது,பத்திரிகையை ஏன் வாங்கவேண்டும்?என கூறும் நோர்வேஜிய பத்திரிகையிலிருந்து சில விடயங்கள்:
–நடுநிலை,சுயாதீனமான,புதுமை கருத்துடன்
–பல்வேறு இட விடயங்களை கூறல்.
–வெளிவாழ்வு,விளையாட்டு,சங்கீதம்,இளைஞர் விடயங்களை அளித்தல்.
–கலாசாரவிடயங்களுக்கு தனியான பகுதி.
–சகலரதும் கருத்து,எழுத்துக்கு மதிப்பளித்து,சமுதாயவிவாதத்தில் தீவிர பங்கு.
–உள்ளூர்விவகாரம்,தேவைகட்கு முக்கியம்
–துணிவான,முன்னேற்றகரமான,(பாதிப்பான விடயங்களை) சுட்டிக்காட்டும் தன்மை.
–சமுதாயத்தில் பலவீனமானகுழு அரசால், தனிப்பட்டோரால் பாதிக்கப்படுவதை எதிர்த்தல்.
–கையடக்கமான,வாசகர்நட்பான அமைப்பு

9 23.01.97ல் சிறுகதைஎழுத்தாளர்,வல்வை பாலசந்திரமூர்த்தி,பாலேந்திரா–இரத்தினவேல் கவிதா திருமணம் ஒஸ்லோவில் நடந்தது. சர்வதேச தமிழரின் மனப்பூர்வவாழ்த்துகள்!

10 உலகத்தமிழ்பண்பாட்டுஇயக்க சுவிஸ் கிளை வெளியிட்ட காலண்டர் கிடைக்கப் பெற்றோம்.தலைவர் ம.மனோகரன்,செயலர் சிவராசசிங்கம்,பொருளர் முருகவேளுக்கும் பாராட்டுக்கள்!Tel.Fx.0041.319921897

சர்வதேசதமிழரில்,வரும் கதைகளின் சம்பவங்கள்,பெயர்கள் யாவும் கற்பனையே! வாசகர்கடிதங்கள் மிகமிக வரவேற்கப்படும்! ஆக்கங்களை மீள்பிரசுரம் செய்யின் இச்சஞ்சிகையை குறிப்பிடுக!தங்கள் விமர்சனம்,ஆலோசனைகள் நமக்கு வழிகாட்டும்! ஆக்கங்கட்கு ஆக்கியோரே பொறுப்பு. திருத்திவெளியிட ஆசிரியருக்கு உரிமையுண்டு. முகவரி மாற்றத்தை உடன் தருக!

www.tamilarangam.net

# Folkehøgskolen

## Konkurransepoeng og utvida minste-stipend

Stortingsmelding nr 51 (1995–96) om folkehøgskolen og utdanningssamfunnet blei behandla i Stortinget 14. januar 1997. Resultatet blei m a desse vedtaka:

*«Med verknad frå og med skoleåret 1997–98 skal elevar som gjennomfører eit folkehøgskoleår på 33 veker, få utteljing i form av tre konkurransepoeng ved opptak til høgre utdanning i tillegg til alderspoeng, under føresetnad av skoledokumentasjon og registrert elevframmøte på 90 %».*

*«Med verknad frå og med skoleåret 1997–98 skal elevar som vel å ta folkehøgskolen som siste år i eit fireårig løp, ha rett til utvida minstestipend til dei er 20 år».*

Skolar som vil vere med på ordninga med konkurransepoeng, må utarbeide sin eigen skoledokumentasjon. Retningsliner for dette arbeidet vil bli sendt til skolane kring 1. mai.

Vedtaket om utvida minstestipend føreset ei løyving av nødvendige midlar frå Stortinget. Når denne ligg føre, vil det bli sendt ut orientering og supplering av forskriftene for Statens lånekasse for utdanning.

A-11/97

**Kyrkje-, utdannings- og forskingsdepartementet**

Innrykt av Statens informasjonsteneste

## மக்கள்உயர்பாடசாலை

**போட்டிப்புள்ளிகள், சிறுநிதிஉதவிஅதிகரிப்பு**

மக்கள்உயர்பாடசாலை, கல்விசமூகம் பற்றிய பாராளுமன்ற அறிக்கை எண்.51 (1995-96) பாராளுமன்றில் 14.01.1997ல் ஆராயப்பட்டது. இதன் பலன் பின்வரும் முடிவுகளாகும்:

-கல்வியாண்டு 1997-98இலிருந்து 33கிழமை, மக்கள்-உயர்பாடசாலைவருடத்தை முடிக்கும் மாணவர், உயர்கல்வி அனுமதியின் போது, வயதுப்புள்ளிகளுடன், மேலதிகமாக 3போட்டிபுள்ளிகள் பெறுவர். பாடசாலைஅத்தாட்சிப்பத்திரத்துடன், 90வீத மாணவவருகைப்பதிவும் இதற்கு விதியாகும்.-

-1997-98கல்வியாண்டிலிருந்து, 4வருடகாலகல்வியின் இறுதி வருடமாக, மக்கள்உயர்பாடசாலையில் பயிலும் மாணவர்க்கு 20வயதுவரை அதிகரித்த சிறுநிதியுதவிக்கு உரிமையுண்டு.-

போட்டிப்புள்ளிகள் குறித்தஇவ்விதியை பின்பற்றவிரும்பும் பாடசாலைகள், தத்தம் பாடசாலைக்கோவைகளை ஆக்கிக் கொள்ளவேண்டும். இதுகுறித்த வழிகாட்டிவிதிகள் 01.05.97 வரையில், சகலபாடசாலைகட்கும் அனுப்பப்படும்.

அதிகரித்தசிறுநிதிஉதவி தீர்மானத்துக்கு, பாராளுமன்றின் நிதிஒதுக்கீடு அனுமதி அவசியமாகும். இவ்வனுமதி கிட்டியதும், அரசகல்விக்கடன்நிதியத்துக்கு, விதிகளின் விளக்கமும் மேலதிகவிபரங்களும் அனுப்பிவைக்கப்படும்.

**நோர்வே தேவாலய, கல்வி, ஆராய்ச்சி அமைச்சு**

-அரசதகவல்சேவையால் வழங்கப்பட்டது. அ.-11-97


## இதோ உங்கள் சர்வதேச தொலைபேசிச் செலவை 25–75% வரை சேமியுங்கள்

ONE WORLD COMMUNICATIONS INC

" Connecting Your World"

ONE WORLD COMMUNICATION-உடன் தொலைத்தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம் குறைந்த தொலைபேசிக் கட்டணத்துடன் உலகத்தின் எந்த மூலையிலும் உள்ள உங்கள் உறவினர்களுடனும் சிநேகிதர்களுடனும் எந்த நேரமும் மிகவும் சுலபமான முறையில் உங்கள் வீட்டு தொலைபேசி மூலம் அல்லது கைத்தொலைபேசி (Mobile) மூலமோ தொடர்பு கொள்ளலாம். இந்த இணைப்பைப் பெறுவதன் மூலம், *உங்கள் தொலைபேசிச் செலவு 25---70% வரையிலான பணச் சேமிப்பு * உங்கள் வசதிக்கேற்ப கட்டணத்தை இரு வழிகளில் செலுத்தலாம். கிரடிற்காட் (Visa Card, Master Card, Dinners, Ameri..Ex.) மூலம் அல்லது முற்பணம் செலுத்தலாம். * உங்கள் Callback number -ஐ உடனே மாற்றும் வசதி *மாத முடிவில் நீங்கள் உரையாடிய நேரம், இலக்கம், செலவிடப்பட்ட பணம், சகல விபரங்கள் அனுப்பப்படும்.

முற்றிலும் சட்டரீதியான இச் சேவையை எந்த நாட்டிலுள்ளவர்களும் இணைப்பைப் பெறலாம்.


சில உதாரணங்கள், ( Rates in US Dollars)

| COUNTRY | OWC Rate | COUNTRY | OWC Rate | COUNTRY | OWC Rate |
|---|---|---|---|---|---|
| Norway to Sri lanka | 1.44 | U K to Singapore | 0.32 | India to USA | 0.77 |
| Norway to India | 0.99 | U K to Australia | 0.40 | India to Canada | 0.80 |
| Norway to Canada | 0.31 | Germany to New Zealand | 0.57 | Sri Lanka to France | 1.39 |
| U K to Sri lanka | 1.21 | Germany to Malaysia | 0.94 | Australia to USA | 0.31 |

தொடர்பு கொள்க.



K.KAMALARAJA,
Tel: + 47 32780320,
Fax: +47 32780320,



VARMMAN MARKETING.
TOMTA.
N-3360 GEITHUS.
NORWAY.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ISSN:0805-7443 **SARVADESA TAMILER** 15,-Nkr Vol.4;Nr.2;

*March 1997*

# C-BLAD

Editor:N.S.Pirabu,B.Sc.,Dip.Journalism(U.K.)
L.Hervigs vn.69A , 3035 Drammen , Norway.
Tl./Fx.32.813416;E.mail:nsp@oslonett.no

Subscr./yr: Scandinavia:90,-NKr; other countries::15 USD
Postgiro:0532 0899 453 ,Postbanken,0021 Oslo Bankgiro:6066 1012 199,kredit kassen bank,3000 Drammen

**Norges Tamiltidsskrift for informasjon,kunnskap,kultur og solidaritet .**



## சுகாதார,சூழல்,பாதுகாப்பு

### 1997-தை-01 இலிருந்து செல்லுபடியாகும் எளிமையான உள்ளக கட்டுப்பாட்டு விதி

சகலபொது,தனியார்துறைகளின் தலைமையாளர்களும்,-ஒழுங்குமுறையான,சுகாதார,சூழல்,பாதுகாப்பு செயல்முறை விதியை(உள்ளக கட்டுப்பாட்டு விதி)-அமுல்படுத்தும் பொறுப்புள்ளவர்கள் ஆவர்.

இந்தவிதி,தற்போது எளிமையாகவும்,தெளிவாகவும் உள்ளதுடன், ஒருபுதியவழிகாட்டி முறையானது,எப்படி செயல்முறை நடைமுறைப்படுத்தப்படலாம்,சகலருக்கும்,எப்படி பயன் கிடைக்கச்செய்வது என,பயனான ஆலோசனை,யுக்தியையும் தருகிறது.

ஏதாவது கேள்விகள் எனில்,அல்லது இலவசமாக விதிகளை அனுப்பிவைக்க:

தொலைபேசி பச்சைஎண்ணை தொடர்புறுக:**800 33 303** (8-16 மணி)

பிரயோசனமான தகவல் பெற,-தொலைநகலில் விரைவானசேவையை-பயன்படுத்துக: **815 44 054** அல்லது, இன்ரநெற்றும் பாவிக்கலாம். http://odin.dep.no/kad/hms/

**மேலும் திறமான சுகாதார,சூழல்,பாதுகாப்பு!**

**-அதனால்பயன்பெறுவது நீங்கள் மட்டுமல்ல!**

நோர்வே உள்ளூராட்சி-தொழில் அமைச்சு,மக்களையும்,சூழலையும் பாதுகாக்கும்நோக்கில், 6 திணைக்களங்களுடனும்,அமைப்புகளுடனும் ஒத்துழைக்கிறது.

-----------------அரசதகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்டது. அ-6-97-----------

# Helse, miljø og sikkerhet

## Forenklet internkontrollforskrift gjelder fra 1. januar 1997

Ledelsen i alle offentlige og private virksomheter har ansvaret for å ivareta «Forskrift om systematisk helse-, miljo- og sikkerhetsarbeid (Internkontrollforskriften)». Forskriften er nå forenklet og mer oversiktlig, og en ny veiledning gir nyttige råd og vink om hvordan arbeidet kan gjennomføres og gi utbytte for alle.

Har du spørsmål, eller ønsker forskriften gratis tilsendt, ring grønt nr.

**800 33 303** (8 -16)

Vil du ha nyttige tips, bruk «Straks På Faks» **815 44 054** eller Internett
**http://odin.dep.no/kad/hms/**

**Bedre helse, miljø og sikkerhet**
**- du er ikke alene om å tjene på det**

Kommunal- og arbeidsdepartementet samarbeider med 16 etater og organisasjoner for å trygge mennesker og miljø

nrykket av Statens informasjonstjeneste A-6/97


தகவல் சேவை பலாபலன்களை வாசகர்களுடன் பகிரலாம்.சஞ்சிகை தொடர்ந்து பெற விரும்பினால் சந்தா தந்து பதியுங்கள்! உலக தமிழ்பத்திரிகை/சஞ்சிகைகள்,நூல்கள் மாற்றுத்திட்டத்தில் பங்குகொள்ளவிரும்பின் உங்கள்வெளியீட்டை அனுப்புக! முகவரியுடன் அறிமுகமாகும்! சர்வதேச தமிழரையும் உங்கள் இதழில் முகவரியுடன் அறிமுகம் செய்ய மறக்கவேண்டாம் !

2000 ம் பிரதிகள் ஆட்டிஸ்றிக் அச்சகத்தால் அச்சிடப்பட்டது 22 36 20 26

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்